நாவாந்துறை
கிளை நூலகம்

விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 11 சனிக்கிழமை (28.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

## கடன் கொடுத்து ஏமாந்த சோகம்

# தாயும் 3 குழந்தைகளும் நஞ்சருந்தி உயிர்மாய்ப்பு!

(யாழ்ப்பாணம்) நண்பனுக்கு கடன் கொடுத்து ஏமாந்ததில் உயிரை மாய்த்த கணவனின் இழப்பை தாங்க முடியாமல் இளம் தாய் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளுடன் உயிரை மாய்ப்புச் செய்து கொண்ட சம்பவம் யாழ். குடாநாடு முழுவதும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (23-ம் பக்கம்...)



## நட்பை நம்பி ஏமாற்றம்!

### உறவுகள் கண்ணீர்

(யாழ்ப்பாணம்)


நட்பை நம்பி ஏமாந்ததாலேயே ஐந்து உயிர்களும் பரிதாபமாக பறிக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்னரும் இந்த உலகம் திருந்துமா? என உறவுகள் கண்ணீர் மல்க கேள்வி எழுப்பியுள்ளனர்.


கணவரை இழந்த சோகத்தில் மனைவி தனது பிள்ளைகளுடன் உயிரை மாய்த்து கொண் 23

## மோ.சைக்கிள் மோதி பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியை கடக்க முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு 23





## வாழ ஆசைப்பட்டோம்; ஆனால் முடியவில்லை

### நீதிபதி, உறவுகளுக்கு மனதை உருக்கும் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

நீடித்த காலம் வாழ ஆசைப்பட்டோம். இறுதிவரை அதற்காக போராடினோம் முடியவில்லை... போகிறோம்.

எமக்கான நியாயத்தை பெற்று கொடுங்கள் என நேற்றைய தினம் உயிரை மாய்ப்புச் செய்து கொண்ட இளம் குடும்ப பெண் நீதிபதிக்கும் தனது குடும்பத்தாருக்கும் எழுதி உள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

மேன்மை தங்கிய நீதிபதி இளஞ்செழியன் அவர்களுக்கு...

எனது தாழ்மையான 24

## அரசியல் கைதிகள் விடயத்தில் என்ன செய்தது கூட்டமைப்பு?

### பொது அமைப்புகள் சீற்றத்துடன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் தொடர்பில் அரசிடமிருந்து சாதகமான பதிலை பெற்றுத்தரக்கூட முடியாத தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ன காரணத்துக்காக அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்றது என கேள்வி எழுப்பியுள்ள யாழ்.பல்கலைக்கழக சமூகம் உட்பட்டதான பொது அமைப்புக்கள், இந்த சிறு விடயத்தை கூட செய்ய முடியாதவர்கள் தமிழ் மக்களுக்காக வேறு எதனை அரசுக்கு சார்பாக செயற்பட்டு 23

## அரியாலை இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு;

# பண்ணை அதிரடிப்படை முகாமில் சிக்கியது மோ.சைக்கிள், ஆட்டோ

(யாழ்ப்பாணம்)

அரியாலை - மணியந்தோட்டப் பகுதியில் இளைஞன் மீதி துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் யாழ். பண்ணைப் பகுதியில் உள்ள விசேட அதிரடி படையின் முகாமில் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனை அடுத்து நீதிமன்ற உத்தரவு பெற்று அவற்றை மீட்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீட்புச் சம்பவத்தினை அடுத்து சூட்டுச் சம்பவத்தினை நடத்தியவரை பொலிஸார் இனங்கண்டு, அவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் அரியாலை - 24

## ஸ்பெயினிலிருந்து தனி நாடானது கட்டலோனியா

(மட்ரிட்)

ஸ்பெயினில் இருந்து கட்டலோனியா தனி நாடாக பிரிந்ததாக கட்டலன் நாடாளுமன்றத்தில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. .

ஸ்பெயினில் உள்ள இந்த தன்னாட்சிப் பிரதேசத்தில் தனது நேரடி ஆட்சியை அமுல்படுத்த பிரதமர் மரியானோ ரஜோய் 23

## கடற்றொழிலுக்கு சென்றவர் ஜெலி மீன் கடித்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடலில் இருந்த ஜெலி மீன் கடித்ததன் காரணமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதில் சுதுமலை சாவற்கட்டைச் சேர்ந்த தெய்வேந்திரம் சாந்தராசா (வயது44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் காக்கைதீவு - பாலதீவு கடற்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் ஜெலி மீன் கடித்ததன் காரணமாக உடல் சோர்வுற்ற நிலையில் குறித்த மீனவர் சக மீனவர்களால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அனும[illegible] 23

## தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் ஏமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

கட்டார் விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி நேற்று நாடு திரும்பியுள்ள நிலையிலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் ஒரு தீர்வு கிடைக்கவில்லை. இவ் விடயம் தொடர்பில் எவ்வித அறிவிப்புக்களும் வெளியாகவில்லை.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் தமது வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்ற வேண்டாம் எனக் கோரி கடந்த மாதம் 23-ம் திகதியில் இருந்து அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது அவர்களின் உடல் நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விற்பனைக்கு

பஜாஜ் டிஸ்கவறி-100CC வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0772030309**

(1162)

## வாழ ஆசைப்பட்டோம்;...

ஏற்கவில்லை. ஊருக்கு மட்டுமே ஒற்றுமையாக காணப்பட்டோம். இன்று என் கணவனின் உயிர் தொலை ந்து தான் இவர்களின் உறவு வேண்டும் என்றால் எனக்கு வேண்டாம். என க்கு என் புருசன் பொக்கிஷம் அவர் இருக்கும் போது அந்த சந்தோசத்தை இவர்களால் கொடு க்க முடியவில்லை.

என் கணவன் வழி தான் எமக்காக இருந்தது. நான் சம் மதித்தேன். பஞ்சம் வரும் பஞ்சத்தோட வந்த வடு போகாது சித்தி. சும்மாவே மாமி எங்கட குடும்பத்துக்காக தலையிடுவது எங்களுக்கு பிடிக் கிறதில் லை இனி அவர்களின் காசும் கொடுக்க முடியாமல் வந்து விட்டது. இனி வாழ்ந்தும் இறந்தும் ஒன்டுதான்.

எங்களுக்கு சாக வேண்டி முடிவெடுத்தேன் அப்புறம் எப்படி சாகப் போறேன் என்று போன்பண்ணி சொல்லுறது. சாகிறவள் சொல்லாள் நடிப்பவள் சொல்வாள்.

பெற்ற பிள்ளையின் உணர்வு களை புரிந்து கொள்ளாதவர்கள் பேரப்பிள்ளையின் உணர்வு களை புரிவினமா? செத்த வீட்டுக்கு வந்த 253000 ரூபா கணக்கு கேட்க முடியல்ல, மாமிக்கு காரணம் மகளின்ர வாழ்க்கை என்டு. நாளை ஒரு பிரச்சினை என்றா இவை நீதி கேட்டினமா யாரை நம்பி இற ங்குவது. நாங்க சாக வெளிக்கிட்டதே இவேண்ட காசை கொடுக்க முடியாமல் தான். அப்புறம் இழப்பை இவர் மட்டும் தழுவிட்டார். அதன் பின் இவேட்ட கை ஏந்தினா? என்ட புரிசன் உயிர் விட்டதுக்கு அர்த்தமே இல்ல.

இந்த காசு தீர்த்தாலே போதும். நாங்கள் இந்த வீட்டையும் கொடுத்திட்டு இவேண்ட தலையீடு இல்லாம தூர வாழலாம் என்டு ஆசைப் பட்டம் சித்தி. குடித்த பின் தான் சொன்னார் குடிச்சிட்டன் என்டு. எனக்கு ஏதோ செய்யிது விட்டிட்டு போக போறன் போல பிள்ளைகளுக்கும் குடுத்து குடிச்சிட்டு கூட்டிக் கொண்டு வந்திடு என்டார் என எழுதியுள்ளார்.

(மு-9,4)

## கார், வான் வாடகைக்கு தேவை

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.

**0764481101**

(1160)

## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**



28.10.2017 முதல் 05.11.2017 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

(C-173)

**நாதன் இன்**

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்றிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

## சமையலாளர் தேவை

இந்திய சைவ, அசைவ உணவு தயாரிக்கும் ஆண் சமையலாளர்கள் தேவை.

தகைமைகள்: ■முன் அனுபவம் இருத்தல் வேண்டும்
■ 45 வயதிற்கு குறைந்தவர்கள்

தகுதியுடையோர் சுயவிபரக் கோவையுடன்(CV) 30.10.2017 அன்று நேரில் வரவும்.

THE THINNAI HOTEL
86, PALALY ROAD, JAFFNA.
021 203 0400, 0779699416

The Thinnai

(1161)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பராமரிப்பாளர்கள்

**தகைமைகள்:**

1.க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை

2.பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.

3.வயதெல்லை-30-50

4.விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல். தியாகசிந்தனை, சம்பளத்துக்காக மட்டும் வேலை செய்பவராக இல்லாது சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு கடமை புரிய விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

■ குறிப்பு: சம்பளம் மாதம் ரூபா 18,000/-ற்கு குறையாது வழங்கப்படும். கடமையின் ஈடுபாட்டிற்கேற்ப பின்னர் அதிகரிக்கப்படும்.

■ கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "பராமரிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகலசான்றிதழ்களின் பிரதிகளுடன் (கிராமசேவையாளர் நற்சான்றிதழ், இரண்டு சமூகப் பெரியவர்களது நற்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாளஅட்டைபிரதி, கல்வித் தகைமைச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்க வேண்டும்) 05.11.2017ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். காலதாமதமாகும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-**
தி.இராசநாயகம், தலைவர், மகாதேவாசுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி
தொலைபேசி இல: 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி:rasa46@yahoo.com

(சி-193)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு.பேரம்பலம் தனபாலசிங்கம்**




இன்று 2017.10.28ஆம் திகதி வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் யா/இந்து மகளிர் கல்லூரியில் வழங்கப்படும் விருது வழங்கும் விழாவில் "பிரதீபா பிரபா" நல்லதிபர் விருதினைப் பெறும் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய எமது பாடசாலை அதிபர் திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களை மேலும் பல பதவியுயர்வுகள் பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.

(சி-187)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**நி.பிருதுவி**
(179 புள்ளி)

**நெ.அர்ச்சனன்**
(162 புள்ளி)

**யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில்**
**2017-தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய**

■ நிர்மலன் கௌதமி தம்பதிகளின் செல்வப்புதல்வி பிருதுவி பாடசாலையில் அதிகூடிய 179 புள்ளியினை பெற்றும்

■ நெவில் தனராஜ் கௌசுகி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அர்ச்சனன் 162 புள்ளியினை பெற்றும்

பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை தேடிதந்தமைக்காக, இன்றைய பரிசளிப்பு விழா நன்நாளில் எமது பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

"கிருஷ்ணபதி"
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

வாழ்த்துவோர்:-
திரு.மா.மெய்யழகன் (சின்னதாத்தா)
செல்வி மெ.இங்கிதை

## நல்லாசிரியர் விருதுக்கான வாழ்த்தும் பாராட்டுக்களும்




திரு.த.ரவீந்திரன்
(அதிபர்)

திருமதி அ.பரணீதரன்
(ஆசிரியை)

(1160)

இவர்கள் 2017ம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருதான "குரு பிரதீபா பிரபா" விருதினை இன்று யா/இந்து மகளிர் கல்லூரியில் பெற்றுக்கொள்வதை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர்கள்

யா/வட இந்து [illegible]
ஆசிரியர்கள், மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி நாடு திரும்பினார்



(கொழும்பு)

கட்டாருக்கு விஜயம் மேற் கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை நாடு திரும்பினார். கடந்த 24 ஆம் திகதி இரு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்டாருக்கு சென்றிருந்தார்.

ஜனாதிபதிக்கு கட்டார் அமீர் திவான் மாளிகையில் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்நிலையில் நேற்றுக் காலை ஜனாதிபதி நாடு திரும்பினார்.(இ-7)

# இலங்கையில் முதன் முதலாக இலத்திரனியல் அடையாள அட்டை

## நேற்று அறிமுகம் செய்யப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில்முதல்தடவையாக இலத்திரனியல் அடையாள அட்டைகள் (SMART Identity Card) வழங்கும் நிகழ்வு நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

உள்நாட்டு விவகாரங்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார விவகார அமைச்சர் எஸ்.பி. நாவின்னவின் தலைமையில் இலங்கை ஆட்பதிவு திணைக்களத்தினால் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இந்த அடையாள அட்டைகளில் 12 இலக்கங்கள் காணப்படுவதுடன், சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (International Civil Aviation Organization-ICAO) தரத்திற்கு அமைவான படம் மற்றும் இயந்திரத்தினால் வாசிக்கக்கூடிய பார்குறியீடு (Barcode) என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

பெயர், பிறந்த இடம், முகவரி மற்றும் பாலினம் என்பன மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ள அதேவேளை, அடையாள அட்டைக்கு சொந்தக்காரரின் கையொப்பமும் இந்த அடையாள அட்டைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த இந்த அடையாள அட்டை சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரத்தில் அமைந்துள்ளதுடன், இதனூடாக பொதுமக்கள் விரைவாகவும் இலகுவாகவும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று இலங்கை ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வர்த்தமானி புதனன்று வெளியாகும்

## துறைசார் அமைச்சர் பைஸர் அறிவிப்பு

(கொழும்பு)



**உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் புதன்கிழமை வெளியிடப்படும் என அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார். குறித்த அறிவித்தல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.**

நேற்றுக்காலை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

அம்பகமுவை மற்றும் நுவரெலிய பிரதேச சபைகள் வேறுபடுத்தப்படும் விதம் தொடர்பாக இங்கு வெளிப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறித்த பிரதேசங்களில் எல்லைகள் மற்றும் மக்கள் செறிவு என்பன தொடர்பாக கவனம் செலுத்திய பின்னர் குறித்த அறிக்கை வெளியிடவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னர் அமைச்சர்கள் தமது தனிப்பட்ட கொள்கைக்கு அமைவாக செயலாற்றுவதாக அவர் குற்றம் சுமத்தினார். (இ-7)

# தகவலறியும் சட்டம்;ஒருவருடத்தில் 12 ஆயிரம் விண்ணப்பங்கள்

## இந்தியாவை விட இலங்கையில் ஆர்வம் அதிகம்

(கொழும்பு)

தகவலறியும் உரிமைச் சட்டம் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு வருட காலத்தினுள் தகவல்களைக் கோரி அரச நிறுவனங்களுக்கு 12 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று பதில்களும் தகவல்களும் வழங்கப்பட்டதாக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியதிஸ்ஸ ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு குறுகிய காலத்திற்குள் இவ்வளவு பெருந்தொகையான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமையானது இலங்கை மக்கள் தகவலறியும் சட்ட மூலத்தின் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்வதில் மிகவும் ஆர்வமுடன் உள்ளமையை எடுத்துக் காட்டுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில்தகவலறியும் உரிமைக்கான சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் அதன் சகல மாநிலங்களிலிருந்து 50,000 விண்ணப்பங்கள் மாத்திரம் கிடைக்கப்பெற்றன.

இந்தியாவுடன் ஒப்பிடுகையில் சிறு தீவான இலங்கையில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மூலம் இலங்கை மக்களின் தகவலறியும் உரிமை பற்றிய அறிவு மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளமை தெளிவாகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

பொது மக்களால் கோரப்பட்ட தகவல்களை வழங்காமை தொடர்பாக 200க்கு மேற்பட்ட மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவற்றை விசாரணை செய்யவுள்ளதாகவும் தெரிவித்த அவர் மாகாண சபை மட்டத்தில் தகவல் அறியும் சட்டத்தின மூலம் மக்கள் தகவல்களை பெற முடியாத நிலை காணப்படுவதாகவும் இதற்கான தீர்வுகள் எதிர்காலத்தில் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## திங்கட்கிழமைகளில்

# 'இறைச்சி உண்ணக்கூடாது'

(கொழும்பு)

இலங்கையில், திங்கட்கிழமைகளில் இறைச்சி தடை செய்யப்பட வேண்டுமெனக் கோரியுள்ள நான்கு பௌத்த மற்றும் விலங்கு உரிமைகள் நிறுவனங்கள், வெசாக் வரும் மே மாதத்தில் விலங்குணவுகள் உண்பதை, சகல பௌத்தர்களும் தவிர்க்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளன.

அநகாரிக தர்மபால மனிதாபிமான நிறுவனம், விலங்குகளுக்கான தர்மத்தின் குரல், போதிராஜா நிறுவனம், இளைஞர் அகிம்சை இயக்கம் என்பவற்றின் தலைவர்களே, இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக ஊடகச் சந்திப்பு, கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"சகல இலங்கையரும், திங்கட்கிழமைகளில் மாமிசம் புசிப்பதை நிறுத்த வேண்டும். மே மாதம் முழுவதும் சகல பௌத்தர்களும் தாவர போசணிகளாக வேண்டும். இது, இலங்கையை மாமிசம் இல்லாத நாடாக மாற்றுவதற்கான முதற்படி ஆகும்" என, அவ்வர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, விலங்குகளுக்கான தர்மத்தின் குரல் அமைப்பின் உறுப்பினரான வண. பேராதெனிய சதிந்திரிய தேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

"2013ஆம் ஆண்டில், 200,000 மாடுகள், இறைச்சிக்காகக் கொல்லப்பட்டன. இது, 2016ஆம் ஆண்டில் 170,000 ஆகக் குறைந்தது.

"மட்டக்களப்பிலும் அம்பாறையிலும், மாடறுப்பு அதிகமாக உள்ளது. இறைச்சி நுகர்வு, புற்றுநோய்க்கும், தொற்றுநோய்களுக்குமான பிரதான காரணம் என, உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது" என்றார்.

இதேவேளை, வண. அஹன்கம ஆனந்த தேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

"மாடு வெட்டுதலைத் தடை செய்யக் கோரிய 2,600 புத்த ஜெயந்தியின்போது, அண்ணளவாக ஒரு மில்லியன் மக்கள் கையொப்பமிட்ட மனு செயற்படுத்தப் படவில்லை. புத்த ஜெயம் பதியின்போது, பொதுமக்களுக்கு நாம் காட்டிய வீடியோக் காட்சிகளைப் பார்த்த கத்தோலிக்க, முஸ்லிம் குருமார்களும் எம்மோடு சேர்ந்து அந்த மனுவில் கையொப்பமிட்டார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளசுகளின் கால்பந்தாட்ட திருவிழா

# மகுடம் சூடப்போவது யார்?

## இங்கிலாந்து - ஸ்பெயின் இன்று பலப்பரீட்சை

வருங்கால சுப்பர்ஸ்ரார்களின் கால்பந்தாட்ட திருவிழாவின் இறுதிக்காட்சி இன்று கொல்கத்தாவில் அரங்கேறுகிறது.

இதில் கிண்ணத்தை வெல்லப்போகும் போட்டியில் வலிமையான ஸ்பெயின் - இங்கிலாந்து அணிகள் களம் காண்கின்றன.

இப்போட்டியில் வெல்லும் அணி முதன் முறையாக கிண்ணம் வென்று வரலாறு படைக்கலாம்.

இந்தியாவில் உலக கிண்ண கால்பந்து (17 வயதுக்குட்பட்ட) தொடர் நடக்கிறது. முதன் முறையாக இதில் களமிறங்கிய இந்திய அணி, பங்கேற்ற மூன்று லீக் போட்டிகளிலும் தோற்று கடைசி இடம் பிடித்தது.

இந்நிலையில் இன்று கொல்கத்தாவின் சால்ட் லேக் மைதானத்தில் நடக்கும் இறுதியில் இங்கிலாந்து அணி, ஸ்பெயினை சந்திக்கிறது. இங்கிலாந்தை பொறுத்தவரையில் நான்காவது முறையாக் உலக கிண்ண தொடரில் பங்கேற்றாலும் இதுவரை காலிறுதியை தாண்டியது இல்லை. முதன் முறையாக இறுதிக்கு முன்னேறிய இந்த அணி, இம்முறை மெக்சிக்கோ, சிலி, அமெரிக்கா என வலுவான அணிகளை வென்றது. இத்தொடரில் இதுவரை தோல்வியடையாத இங்கிலாந்து அணி (18 கோல்) அதிக கோல்கள் அடித்த அணிகளில் முதலிடத்தில் உள்ளது. இதுவரை 7 கோல் அடித்த இளம் வீரர் ரியான் பிரூஸ்டர், அமெரிக்கா, பிரேசில் என அடுத்தடுத்த போட்டிகளில் 'ஹட்ரிக்' கோல் அடித்து மிரட்டல் 'போர்மில்' உள்ளார். சக வீரரிடம் இருந்து பந்தை பெற்ற அதே வேகத்தில், சிறப்பாக 'பினிஷிங்' செய்கிறார். இவருக்கு கிப்ஸ் ஒயிட், ஹட்சன், அண்டர்சன், சாஞ்சோ உள்ளிட்டோர் கைகொடுக்கும் பட்சத்தில் இங்கிலாந்து அணி இன்று சாதிக்கலாம்.

### கிடைக்குமா கோப்பை?

ஸ்பெயின் அணி 9ஆவது முறையாக இத்தொடரில் களமிறங்கியது. இதற்கு முன் 1991, 2003, 2007ல் இறுதிக்கு முன்னேறியபோதும், கிண்ணம் வெல்ல முடியவில்லை. இத்தொடரை பிரேசிலுக்கு எதிரான தோல்வியுடன் தொடங்கிய ஸ்பெய்ன், நான்காவது முறையாக இறுதிக்கு வந்துள்ளது. இதுவரை 15 கோல் அடித்துள்ள இந்த அணிக்கு, முன்னணி வீரர் அபெல் ரூயிஸ் (6 கோல்) பெரிய உதவியாக உள்ளார். அரையிறுதியில் மாலிக்கு எதிராக 2 கோல் அடித்தார். தவிர, கோமஸ், பெரான், மிராண்டா உள்ளிட்டோரது அசத்தல் இன்றும் தொடரும் பட்சத்தில், இதுவரை தோற்காமல் வலம் வரும் இங்கிலாந்தை சாய்த்து, முதல் கிண்ணம் வெல்லலாம்.



### கடந்து வந்த பாதை

**ஸ்பெயின்**

**லீக் சுற்று:** பிரேசிலிடம் 1-2 என தோல்வி, 4-0 என நைஜரை வென்றது, வட கொரியாவிடம் 2-1 என, வெற்றி, 'ரவுண்ட்-16', 2-1 என பிரான்ஸை வென்றது

**காலிறுதி:** ஈரானை 3-1 என வீழ்த்தியது.

**அரையிறுதி:** 3-1 என மாலியை வென்றது.

**இங்கிலாந்து**

**லீக் சுற்று:** சிலியை 4-0 என, வென்றது. 3-2 என மெக்சிகோவை வீழ்த்தியது. 4-0 என ஈராக்கிடம் வெற்றி

'ரவுண்ட்-16' சுற்று: பெனால்டியில்' 5-3 என ஜப்பானை வென்றது

**காலிறுதி:** 4-1 என அமெரிக்காவிடம் வெற்றி. **அரையிறுதி:** பிரேசிலை 3-1 என வீழ்த்தியது

### 'கோல்டன் ஷூ' யாருக்கு?

உலக கிண்ணத் தொடரில் இதுவரை 7 கோல்கள் அடித்த இங்கிலாந்தின் ரியான் பிரூஸ்டர், சிறந்த வீரருக்கான 'கோல்டன் ஷூ' பெறுவதில் முன்னிலையில் உள்ளார்.

அதேநேரம், தலா 6 கோல் அடித்த ஸ்பெயினின் அபெல் ரூயிஸ், மாலியின் லாசன்னா, இன்று சாதிக்கும் பட்சத்தில் கடும் சவால் தரலாம்.

### 170 கோல்கள்

கடந்த 2013ல் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடந்த உலக கிண்ண தொடரில் அதிகபட்சமாக 172 கோல்கள் அடிக்கப்பட்டன. இந்திய தொடரில் இதுவரை 170 கோல்கள் அடிக்கப்பட்டன. இன்று இன்னும் இரு போட்டிகள் மீதமுள்ள நிலையில், கோல்கள் எண்ணிக்கையில் புதிய சாதனை காத்திருக்கிறது.

### சவாலை சந்திப்போம்

ஸ்பெயின் அணியின் தலைவர் அபெல் ரூயிஸ் கூறுகையில்," யூரோ கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் ஏற்கெனவே இங்கிலாந்தை சந்தித்து உள்ளோம். மீண்டும் இவர்களுக்கு எதிராக விளையாட தயாராக உள்ளோம்," என்றார்.

### ஐரோப்பிய 'எதிரிகள்'

ஐரோப்பிய அணிகளான ஸ்பெயின், இங்கிலாந்து அணிகள் 17 வயதுக்குட்பட்ட யூரோ கிண்ணத் தொடர் இறுதியில், மூன்று முறை மோதின. இதில் 2007ல் ஸ்பெயின் கிண்ணம் வென்றது.

2010ல், ஸ்பெயினுக்கு பதிலடி கொடுத்து இங்கிலாந்து அணி கிண்ணத்தை தட்டிச் சென்றது. இந்த ஆண்டு குரோஷியாவில் நடந்த இறுதியில், கடைசி நேரத்தில் ஸ்பெயின் கோல் அடிக்க போட்டி 2-2 என சமன் ஆனது. பின் 'பெனால்டி ஷூட் அவுட்டில்' ஸ்பெயின் அணி 4-1 என்ற கணக்கில் வென்று, கிண்ணம் வென்றது.

உலக கிண்ண (17 வயது) இறுதியில், இன்றுதான் முதன்முறையாக மோதுகின்றன.

### சாதிக்குமா பிரேசில்?

இன்று மாலை நடக்கும் 3, 4ஆவது இடத்துக்கான போட்டியில் அரையிறுதியில் தோல்வியடைந்த பிரேசில் - மாலி அணிகள் மோதுகின்றன.

### ரசிகர்கள் வரலாறு

சீனாவில் 1985ல் நடந்த முதல் உலக கிண்ணத் தொடரில் அதிகமான ரசிகர்கள் (12,30,976 பேர்) வந்திருந்தனர். இதன் பின், தற்போதைய தொடரில், இதுவரை நடந்த 50 போட்டிகளை காண 12,28,027 ரசிகர்கள் வருகை தந்தனர்.

இது 1985 தொடரை விட சற்று தான் குறைவு (2,949 பேர்). இன்று இரு போட்டிகள் மீதமுள்ளன. இதற்கான டிக்கெட்டுகள் முழுவதும் விற்று தீர்ந்தன.

இதனால் ரசிகர்கள் வருகையில் முதலிடம் பிடித்த தொடர் என்ற பெருமை இந்தியாவுக்கு இன்று காத்திருக்கிறது.

### 20, 19... 17?

இங்கிலாந்து அணிக்கு இந்த ஆண்டு ராசியானதாக உள்ளது. கடந்த மே 20 - ஜூன் 11 வரை கொரியாவில் நடந்த 20 வயதுக்குட்பட்ட உலக கிண்ண தொடரில் கிண்ணம் வென்றது.

பின், ஜோர்ஜியாவில் நடந்த யூரோ கிண்ண (19 வயது) தொடரில் (ஜூலை 2015) சம்பியன் ஆனது. இன்று சாதித்தால், 17 வயது தொடரிலும் உலக கிண்ணம் வெல்லலாம்.

### பரிசு இல்லை

இளம் கால்பந்து வீரர்கள் உலகளவில் தங்கள் திறமையை வெளிப்படுத்த 'பிபா' சார்பில் கொடுக்கப்பட்ட வாய்ப்புத்தான் 17 வயதுக்குட்பட்ட உலக கிண்ணத் தொடர். இதில் கிண்ணம் வெல்லும் அணிக்கு, 'பிபா' பரிசுத் தொகை தருவது இல்லை.

### இதுவரை சம்பியன்

உலக கிண்ண (17 வயது) கால்பந்து தொடரில் அதிகபட்சம் நைஜீரியா ஐந்து முறை (1985, 1993, 2007, 2013, 2015) சம்பியன் ஆனது.

அடுத்து பிரேசில் 3 (1997, 1999, 2003), கானா (1991, 1995), மெக்சிகோ (2005, 2011) தலா 2, சோவியத் யூனியன் (1987), சவுதி அரேபியா (1989), பிரான்ஸ் (2001), சுவிட்ஸர்லாந்து (2009) அணிகள் தலா ஒரு முறை கிண்ணம் வென்றன.

# ஓய்வுபெறுகிறார் ஹிங்கிஸ்

## 3ஆவது முறையாக அறிவிப்பு

டென்னிஸ் அரங்கில் இருந்து மூன்றாவது முறையாக ஓய்வு பெறுகிறார் சுவிட்ஸர்லாந்தின் ஹிங்கிஸ்.

சுவிட்சர்லாந்து டென்னிஸ் நட்சத்திரம் மார்டினா ஹிங்கிஸ்,(வயது-37) முன்னாள் 'நம்பர்-1' வீராங்கனையான இவர், அவுஸ்திரேலிய ஓபன் தொடரில் 'ஹட்ரிக்' (1997, 98, 99) பட்டம் வென்றவர். தவிர விம்பிள்டன் (1997), யு.எஸ்.ஓபன் (1997) என ஒற்றையர் பிரிவில் 5 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர்.

அடுத்தடுத்த காயங்கள் காரணமாக, தனது 22 வயதில் (2003) முதன் முறையாக ஓய்வு பெற்றார். 2006இல் மீண்டும் டென்னிஸ் அரங்கிற்கு திரும்பிய இவர், இம்முறை இரட்டையர் பிரிவில் அதிக பட்டங்கள் கைப்பற்றினார்.

பின், 'கோகைன்' என்ற ஊக்கமருந்து பயன்படுத்தி சிக்க, 2 ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து 2007இல் மீண்டும் ஓய்வு அறிவித்தார்.

கடந்த 2013இல் மறுபடியும் டென்னிஸ் வாழ்க்கைக்கு திரும்பினார். இம்முறை இந்தியாவின் சானியா மிர்சாவுடன் இணைந்து, டென்னிஸ் அரங்கில் தொடர்ச்சியாக வெற்றிகள் குவித்தார். 2015-17இல் மட்டும் பெண்கள் இரட்டையரில் 4, கலப்பு இரட்டையரில் 6 என 10 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை கைப்பற்றினார்.

தற்போது, தைவானின் சன் யங்-ஜனுடன் இணைந்து, சிங்கப்பூரில் நடக்கும், உலக டூர் பைனல் தொடரில் பங்கேற்றுள்ளார். இத்தொடர் இன்று முடிகிறது. இதன் பின் சர்வதேச தொடரில் இருந்து, 3ஆவது முறையாக ஓய்வுபெற முடிவெடுத்துள்ளார்.



பெண்கள் இரட்டையரில் 'நம்பர்-1' இடத்திலுள்ள ஹிங்கிஸ் கூறுகையில்,

" புகழின் உச்சத்தில் இருக்கும்போதே ஓய்வுபெற வேண்டும். என்னைப் பொறுத்தவரை ஓய்வுக்கு இது தான் சரியான தருணம் என நினைக்கிறேன்," என்றார்.

### 25 கிராண்ட்ஸ்லாம் பட்டம்

கடந்த 1994ல் டென்னிஸ் அரங்கில் நுழைந்தவர் ஹிங்கிஸ். இதுவரை 5 ஒற்றையர், 7 இரட்டையர், 13 கலப்பு இரட்டையர் என மொத்தம் 25 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார்.


## வரம் தரும் புத்திநாச்சி மலர்

## வெளியீட்டு விழா அழைப்பு

காலம் : 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 3.00 மணி - பி.ப 6.30 மணிவரை
இடம் : பத்திநாச்சி ஆலய மண்டபம்
றக்கா தெரு, யாழ்ப்பாணம்.

தலைமையுரையும் மலர் வெளியீட்டு உரையும்
**பிரம்மஸ்ரீ ம. ஜெயராம சர்மா**
(முன்னாள் கல்வி இயக்குநர், அவுஸ்திரேலியா)

நூல் வெளியிடுபவர்
**பிரம்மஸ்ரீ சோ. கேதீஸ்வர சர்மா**
(ஆலய பிரதம ஸ்தானிகர்)

மாவட்டச் செயலர், யாழ்.பிரதேச செயலர், வட மாகாணத் திட்டமிடல் பணிப்பாளர், வட மாகாண ஆளுநரின் செயலாளர், இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர்கள், இந்து மதகுருமார், கலைஞர்கள், அம்பாள் அடியார்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கிறார்கள்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

(1159)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணைமுறி விவகாரம்; அனிகாவிற்கு அச்சுறுத்தல்

# ‘அரசியல் தலையீடு இல்லை’

## பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் சாட்சியமளித்த அனிகா விஜேரத்னவுக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன என்பது தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவால் (சி.ஐ.டி) மேற்கொள்ளப்படும் விசாரணை தொடர்கிறது எனவும், அவ்விடயத்தில் அரசியல் தலையீடு காணப்படவில்லை எனவும் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனிகாவுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள், அரசியல் தலையீட்டுக்கு உள்ளாகியுள்ளன எனவும், அதன் காரணமாக அவ்விசாரணைகளை நிறுத்துமாறோ அல்லது இடமாற்றுமாறோ அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன எனவும், செய்தி அறிக்கைகள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பாக விளக்கமளித்துள்ள பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட அத்தியட்சகர் ருவான் குணசேகர, அவ்வாறான தலையீடு காணப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இவ்வாண்டு ஜூலை மாதத்தில், பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியமளித்திருந்த, கொள்ளுப்பிட்டியிலுள்ள சொகுசுத் தொடர் மாடியொன்றிலுள்ள, வீட்டின் உரிமையாளரான அனிகா விஜேரத்ன, குறித்த சொகுசு வீட்டை, மாதாந்தம் 1.45 மில்லியன் ரூபாய் செலவில், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் குடும்பம், வாடகைக்குப் பெற்றுக் கொண்டது எனவும், அதற்கான பணத்தை, பிணைமுறி விவகாரத்தில் சிக்கியுள்ள பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோஸியஸே செலுத்தினார் எனவும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

அத்தோடு, இது தொடர்பான செய்தி வெளியானதும், குத்தகைக்கான ஒப்பந்தத்தை அழிக்குமாறு, அர்ஜுன் அலோஸியஸ் கோரினார் எனவும், பின்னர், ரவி கருணாநாயக்கவின் மனைவியும், “பார்க்கும் வழியில் பார்த்துக் கொள்கிறேன்” என மிரட்டினாரெனவும், அவர் சாட்சியமளித்திருந்தார்.

அதன் பின்னர், அவருக்கான அச்சுறுத்தல், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் உறவினரால் விடுக்கப்பட்டது எனவும், அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனவும், சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரசியல்வாதிகள் அனைவரும் மெர்சல் படத்தை பாருங்கள்!

### பிரதியமைச்சர் விடுத்த கோரிக்கை

(கொழும்பு)



இளைய தளபதி விஜய் நடிப்பில் அண்மையில் வெளிவந்த மெர்சல் திரைப்படம் குறித்து இந்திய அரசியல் தலைவர்கள் பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஒரு தரப்பினர் மெர்சல் திரைப்படத்திற்கு ஆதரவாகவும், மற்றுமொரு தரப்பினர் எதிராகவும் கருத்து வெளியிட்டு வந்திருந்தனர்.

இந்நிலையில், மெர்சல் திரைப்படம் குறித்து பிரதியமைச்சர் ரஞ்சன் ராம்நாயக்க கருத்து வெளியிட்டுள்ளார். இது குறித்து தனது உத்தியோகபூர் டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை விடுத்துள்ள அவர்,

“மெர்சல் திரைப்படத்தை அனைத்து அரசியல்வாதிகளும் பார்க்க வேண்டும். மருத்துவத்துறையின் மாபியா மற்றும் சமூகத்திற்கு நல்ல ஒரு செய்தியினை இந்த திரைப்படம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

அத்துடன், சுகாதாரத் துறை என்பது வியாபாரம் கிடையாது” என அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளார். (இ-7)

Ranjan Ramanayake
@RamanayakeR

#Mersal is a movie that every politician should watch, exposes the medical mafia & gives a great message, Healthcare is not a business

11:46 PM - Oct 26, 2017

## அரசியல்வாதிகள் கூறுவது போல தேர்தலை நடத்த முடியாது

### மகிந்த மறுப்பு

(கொழும்பு)

ஒவ்வொரு அரசியல்வாதியும் கூறும் விதத்தில் தேர் தலை ஜனவரியில் நடத்த முடியாது எனவும் தேர்தலை நடத்துவதற்கு என்று கால எல்லை காணப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அரசாங்கம் விரைவாக உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான அறிவிப்பை வர்த்தமானியில் வெளியிடுவதை வைத்தே தேர்தலுக்குரிய காலம் தீர்மானிக்கப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தேர் தல்கள் ஆணைக் குழுவில் ஊடகங்களிடம்கருத்துத்தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.(இ-7)

## பிரசன்ன ரணதுங்க தம்பதி வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)



நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மற்றும் அவரின் மனைவிக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

வெல்லம்பிட்டி பிரதேச வர்த்தகர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட 64 மில்லியன் ரூபா பணத்தை திருப்பிக் கொடுக்காது அவரை அச்சுறுத்தியதாக பிரசன்ன ரணதுங்க மற்றும் அவரது மனைவி மொரின் ஜெனட் ரணதுங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தங்கள் மகளின் பட்டமளிப்பு விழாவுக்காக வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு கோரி அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் அவர்கள் வெளிநாடு செல்ல நீதிமன்றம் நேற்று அனுமதித்துள்ளது. (இ-7)

## இரண்டு வயதுக் குழந்தை நீரோடையில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டயகம கிழக்கு தோட்டத்தின் முதலாம் டிவி ஷனிலுள்ள நீரோடையிலிருந்து இரண்டு வயதுடைய பெண் குழந்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த குழந்தை தனது வீட்டிற்கு பின்புறமாகவுள்ள நீரோடையில் மூழ்கிய இடத்திலிருந்து 20 அடி தூரத்திலேயே சடலமாக மீட் கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டயகமவில் வசிக்கும் வீரத்திருமகன் பேபிஷாலினி தம்பதியினரின் மகள் டிலுக்சிகாவே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைக் காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் டய கம பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)


YMCA
JAFFNA

YOUNG MEN’S CHRISTIAN ASSOCIATION-JAFFNA
109, Kandy Road, Jaffna.
021 222 2499

**GYM கேள்விக் கோரிக்கை**

யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ(YMCA) கட்டடத் தொகுதியில் GYM உபகரணங்களுடன் குத்தகைக்கு கொடுக்க கேள்விக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளது.

**முடிவுத் திகதி: 11.11.2017 (சனிக்கிழமை)**
**கோரிக்கைகள் அனுப்ப வேண்டிய முகவரி:**
**பொதுச் செயலாளர்**
**வை.எம்.சீ.ஏ. 109, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மேலதிக தொடர்புக்கு: 021 222 2499/**
**076 876'6300**

-பொதுச் செயலாளர்- (சி-170)


## இராசி பலன்

28.10.2017
ஐப்பசி 11, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
அட்டமி பிற்பகல் 1.52 மணிவரை
திருவோணம் பின்னிரவு 2.46 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம் | | ராகு |
| கேது சந் | | | |
| | சனி | சூரி,புத, குரு | செவ் சுக் |

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** எந்தக் காரியத்திலும் நிதானமாக நடந்து கொள்வது நல்லது, வேலைச்சுமை அதிகரிக்கும், வீண் விரயங்கள் ஏற்படலாம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்வர்.

**கும்பம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்யலாம், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**கடகம்:** சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் எண்ணம் உருவாகும், களஸ்திர சுகமுண்டு, எடுத்த காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பகைவர்கள் விலகுவர், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நேற்று முன்தினம் திருக்கல்யாணம் இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

## நினைவுதினக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தோழர் மு.கார்த்திகேசனின் 40 ஆவது நினைவு தினக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலையில் சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும். (இ-10)




## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

சோனப்பு இந்துமயானங்களின் அபிவிருத்தி சம்பந்தமான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தச்சை ஐங்கரன் மண்டபத்தில் (கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு அருகில்) இடம்பெறும். (இ-60)

## கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலைநிகழ்வும் நாளை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலை நிகழ்வும் நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் திருமதி கிருபாஹரி இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், யாழ். வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் காரை ச.ரகுநாதன், கௌரவ விருந்தினர்களாக பிரபல தவில் வித்துவான் தெ.உதயசங்கர் மற்றும் திருமதி றஞ்சனா உதயசங்கர், யாழ். பல்கலைக்கழக நடனத்துறை முன்னாள் தலைவர், வடமாகாண DFCC வங்கி பிராந்திய முகாமையாளர் ரவீந்திரா கிருஷாந்தி தம்பதியினர், காரைநகர் கிழவன்காடு கலாமன்ற உறுப்பினர் சிவஞானம் உமாதேவி தம்பதியினர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## 'நதிபோல மனம்பாயும்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கே.ஆர்.திருத்துவராஜாவின் "நதிபோலமனம் பாயும்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் இடம்பெறும். (இ-7-60)

## யாழ்.வலயம்; 3 பாடசாலைகள் அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு யாழ். வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்தே வகை III பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிபந்தனைகள்

வகை III, பாடசாலைகளுக்கு தற்போது அதிபர் சேவை வகுப்பு 3 இனைச் சேர்ந்த அதிபர்களும் தற்போது அதிபர் சேவை வகுப்பு 3 போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்ட அதிபர்களும் விண்ணப்பிக்க முடியும்.

1.யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்-வகை3.

2.யா/சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை- வகை3.

3.யா/நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை-வகை3.

இவ்விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சைக்குழு ஒன்றின் மூலம் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. விண்ணப்பப்படிவங்களை யாழ்.கல்வி வலயத்தில் பொதுநிர்வாகக்கிளையில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 13.11. 2017 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (இ




வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

## காணிப் பிணக்குகளைத் தீர்க்க விசேட மத்தியஸ்த அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக விசேட மத்தியஸ்த சபை (காணி) யின் அமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறும் என காணி மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள காணிப் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்து தீர்வுகளையும் ஆலோசனைகளையும் வழங்கும் விசேட மத்தியஸ்த சபை கடந்த மாதம் யாழ்.மாவட்டத்தில் தனது சேவைகளை ஆரம்பித்திருந்தது.

அந்த வகையில் காணி, பாதை, மலசலகூடம், கிணறு, கட்டட அமைப்பு தொடர்பான சகல பிணக்குகளும் இந்த சபை ஊடாக தீர்த்துக் கொள்ள முடியும். இது தொடர்பான மேலதிக விபரங்களை அந்தந்த கிராம சேவகர் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

அத்துடன் இன்று நடைபெறும் அமர்வில் நேரடியாக மத்தியஸ்த சபைக்கு வந்து முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். அதன் பின்னர் ஆலோசனைகளும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. (இ-9)

## உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நீரிழிவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையேயான போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதியியல் விசேட வைத்திய நிபுணர் எம்.அரவிந்தன் அறிவித்துள்ளார். இதில் வடக்கு மாகாண பாடசாலை மாண வர்களுக்கான கட்டுரை மற்றும் சித்திரப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

கட்டுரைப் போட்டிகள், இளநிலை, இடைநிலை மற்றும் மூத்த வயதுப் பிரிவு ரீதியாக இடம்பெறவுள்ளன. கனிஷ்ட பிரிவில் தரம் 1 முதல் தரம் - 5 வரையான மாணவர்களும் இடைநிலைப் பிரிவில் தரம்-6 முதல் தரம்-9 வரையான மாணவர்களும் இளநிலைப் பிரிவில் தரம் 10 முதல் க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தர மாணவர்களும் கலந்துகொள்ள முடியும்.

மூன்று வயதுப் பிரிவினரும் நீரிழிவை வெற்றி கொள்வோம் எனும் தலைப்பில் முறையே 250, 500, 1000 சொற்கள் உடைய ஆக்கங்களை சுயமாகப் படைக்க வேண்டும்.

இதேபோன்று சித்திரப் போட்டி நிகழ்வானது கட்டுரைப்போட்டி நிகழ்வு போன்றே மூன்று வயதுப் பிரிவினருக்குமாக இடம்பெறும். நீரிழிவை வெற்றி கொள்வோம் என்ற தொனிப்பொருளை பிரதிபலிக்கும் விதமாக ஏ-3 சித்திரத்தாளில் விரும்பிய வர்ண வகைகளைப் பயன்படுத்தி சித்திரங்களை வரைய முடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாக நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்திய சாலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-7)

## சைவப் புலவர்கள் சங்க விசேட கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா நடத்துதல், சைவ நாதம் மலர் வெளியீடு செய்தல் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர்சங்க செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (இ-7)





கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் ஆசிரியர்தின நிகழ்வுகள் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றன. இதில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் மு. செல்வஸ்தான் கலந்து சிறப்பித்தார். ஆசிரியர்கள் மாலையிட்டு அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா செல்கிறார் மகிந்த

(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று சனிக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். மூன்று நாள் விஜயமாக அவர் இந்தியாவுக்கு செல்வதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச சம்மேளனம் ஒன்றில் கலந்துகொள்ளவே மகிந்த இந்தியாவுக்கு செல்கிறார்.

சர்வதேச பௌத்த மற்றும் கலாசார சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பௌத்த சம்மேளனம் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு சம்மேளன ஏற்பாட்டாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இதற்கமைய இன்று காலை மகிந்த ராஜபக்ஷ இந்தியா நோக்கிப் புறப்படுகின்றார்.(இ-7)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(தி-9675)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 11ஆம் திகதி தை மாதம் 2017 இற்கு பின்னர் பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் (மேற் பிரிவு) வகுப்பில் சித்தியெய்தி எதிர்வரும் பட்டமளிப்பு (பகுதி-I) வைபவத்தில் இளமாணி பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை கீழ்காணும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
1. உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஸ்ட உதவிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வவுனியா வளாகம், வவுனியா
3. www.jfn.ac.lk இணையத்தளம்.

விருதுகள்:-பல்கலைக்கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

முடிவுத் திகதி: 06.11.2017(திங்கட்கிழமை)

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும் தெளிவற்றதும் பூரணப்படுத்தப் படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

முக்கிய குறிப்பு: கலைப்பீடம், விஞ்ஞான பீடம் மற்றும் பொறியியற்பீட மாணவர்கள் உரிய பரீட்சைப்பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் விண்ணப்பிக்க முடியும்.

பதிவாளர். (சி-186)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் க.குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 11ஆம் திகதி தை மாதம் 2017இற்கு பின்னர் பட்டம் பெற்ற தூய, பிரயோக விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:-
எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் (பகுதி-I) பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப்பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள் தங்கப்பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவர்.

விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
1. உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. இணையத்தளம்: www.jfn.ac.lk

முடிவுத்திகதி: 06.11.2017(திங்கட்கிழமை)

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும், தெளிவற்றதும், பூரணப் படுத்தப்படாததும் மற்றும் முடிவுத்திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

முக்கிய குறிப்பு: விஞ்ஞானபீட மற்றும் பொறியியற்பீட மாணவர்கள் உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் விண்ணப்பிக்க முடியும்.

பதிவாளர். (சி-189)



## சாதனையாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் யா/இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படும் மாகாண மட்ட சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் விருதுகளைப் பெறும் எமது பாடசாலை நிகழ்வுகளான,**

- தரம் 02 சித்திரப் போட்டி 3ஆம் இடம் - பி.சுவஸ்திகன்.
- தரம் 03 விரைவு கணிதப் போட்டி 1 ஆம் இடம் - ர.மாதுரியன்
- புலமைப்பரிசில் பரீட்சை 5 ஆம் இடம் - வி.நேருகா
- தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 154 மாணவர்களையும் (86.03 வீதம்)
- ஆங்கில நாடகம் 2ஆம் இடம் பெற்ற மாணவர்களையும்

பாராட்டி வாழ்த்துவதோடு சாதனை படைக்க நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
**யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை,**
**கொக்குவில்.**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**மாகாண நிலை நல்லாசிரியர் விருது-2017**
"குரு பிரதீபா பிரபா"



திருமதி.**தமயந்தி நடேசன்**
(உப அதிபர்)



திரு.**தில்லையம்பலம் சாந்தகுமார்**
(ஆசிரியர்)

**28.10.2017 இன்று யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் விருது வழங்கும் வைபவத்தில் விருது பெறும் எமது பாடசாலை ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்தி நிற்கின்றோம்.**

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

(1155)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 53 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7161 | பிறப்பு: 1973 RC<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில் : BA/ஆசிரியர்<br>தொ.இ: G/6094 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில் Bsc QS,MSC/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/7162 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 4'2"<br>தகைமை/தொழில் O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6099 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: B.Eng/ பொறியியலாளர்<br>தொ.இ: B/7163 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 18 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/Lதனியார் தொழில்<br>தொ.இ: G/2422 |
| பிறப்பு: 1987 RC<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில் Chemical Eng பொறியியலாளர்<br>தொ.இ: B/7164 | பிறப்பு: 1987 RC<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 63 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2472 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சிப்பகுதியில் ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 612 ரூபா பெறுமதியான பாலைமரந்தீராந்திகளை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்ற மூன்று பேருக்கு தலா 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 612 ரூபா பெறுமதியான பாலை மரந்தீராந்திகளை உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு சென்ற மூன்று பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டதையடுத்து மூவரும் குறித்த குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து மூவருக்கும் தலா 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது

*************

கிளிநொச்சிப் பகுதியில் ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தியவருக்கு சாரதியனுமதிப்பத்திரம் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டதுடன் 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திச்சென்ற ஒருவரைக் கைது செய்து வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதியனுமதிப் பத்திரம் ஒரு மாத காலத்திறகு இடைநிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை நாச்சிக்குடா மற்றும் முழங்காவில் பகுதிகளில் ஆபத்தான முறையில் வாகனங்களைச் செலுத்திச்சென்ற இரண்டு சாரதிகளுக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது

*************

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற ஒருவரை கைது செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ..ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (2-315)

## கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு நெல் உலரவிடும் தளங்கள் தலா 5 இலட்சம் ரூபா செலவில் அமைப்பு

(கண்டாவளை)

கிளிநெர்ச்சி மாவட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் இவ்வாண்டு நான்கு நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்பட்டு வ்ருவதாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி. உகநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய விரிவாக்க திணைக்களத்தினால் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், பூநகரி, கோணாவில், முரசுமோட்டை, வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை பதப்படுத்துவதற்கான நெல் உலரவிடும் தளங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொருதளங்கள்ஐந்து இலட்சம் ரூபா செலவில் இவ்வாண்டிற்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் மேற்படி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக செய்கையின் போது 59 ஆயிரம் நிலப் பரப்பிலும் சிறுபோக செய்கையின்போது கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கரிலும் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், அவற்றை அறுவடையின் போது, பதப்படுத்தலில் போதிய நெல் உலர விடும் தளங்கள் போதியளவு இன்மையால் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் பல்வேறு திட்டங்கள் ஊடாக ஒவ்வொரு பிரதேசத்திலும் நெல் உலர விடும் தளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## கல்வி முன்னேற்ற விழிப்புணர்வு கலந்துரையாடல்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி செயலணியின் ஏற்பாட்டில் கிராம மட்ட பெற்றோருக்கான கல்வி முன்னேற்றம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிளி/கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலந்துரையாடலில் பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள், கிராம மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், நலன் விரும்பிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-277)




## உணவகங்களின் கழிவுநீர் வீதிக்கு வெளியேறுகின்றது

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோருகின்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநகர் செல்லும் பிரதான வீதியானது கரைச்சிப்பிரதேச சபையின் தலைமை பணிமனை அமைந்துள்ள இடத்திற்கு அருகில் உணவகங்களின் கழிவுநீர் வீதிக்கு வெளியேற்றப்பட்டு தேங்கி நின்று அவ்விடம் முழுவதும் துர்நாற்றம் வீசுவதாக அவ்வழியாகப் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,



மேற்படி பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள கழிவுநீர் தேங்கி நிற்கும் தொட்டியை இரவு வேளைகளில் திறந்து வீதி வழியாக அந்நீரை வெளியேற்றுகின்றனர்.

இந் நடவடிக்கையானது நீண்ட நாட்களாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் அருகிலுள்ள வர்த்தகர்கள் பிரதேச சபையினரிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கழிவுநீர் நீண்ட நாட்களாக வீதியில் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு பெருகவும் வாய்ப்பு ஏற்படுகின்றது என சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி பிரதேச சபைக்கு முன்பாகவே இவ்வாறான சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுமாகில் ஏனைய இடங்களில் சுகாதார நிலை எப்படி அமையும் எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஆதலால் இவ் விடத்தின் பொதுச் சுகாதார நிலையைக் கருத்தில் கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கமாறு மக்கள் கோருகின்றனர். (2-277)

## விதை நெல்லுக்கு பெற்றுக் கொண்ட பணம் மீளவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்கள் ஊடாக விதை நெல் வழங்குவதற்கென பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் மீளவும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் நிலவும் தொடர் வரட்சி காரணமாக கடந்த காலபோகத்தின் போது நெற் செய்கை பாதிக்கப்பட்டதுடன் சிறுபோகச் செய்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இதனால் இவ்வாண்டு காலபோகச்செய்கைக்கு விதை நெல் பெறுவதில் ஏற்படும் நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு மானிய அப்படையில் விதை நெல்லைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கமக்கார அமைப்புக்கள் பதிவுகளை மேற் கொண்டிருந்தன.

இவ்வாறு பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்கள் விவசாயிகளிடமிருந்து தலா ஐந்நூறு ரூபா பணத்தைப்பெற்று பதிவுகளை மேற்கொண்டிருந்தன.

தற்போது மானிய அடிப்படையில் விதை நெல்லைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் விவசாயிகளிடமிருந்து அறவிட்ட 500 ரூபா பணத்தை மீளவும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு கமக்கார அமைப்புக்கள் ஊடாக பணத்தைச் செலுத்திய விவசாயிகள் குறித்த பணத்தை அந்தந்த கமக்கார அமைப்புக்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஏழு நாட்கள் சமுக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவரைக் கைது செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டு சமுதாயம்சார் சீர்திருத்த கட்டளையின் கீழ் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் கட்டளையிடப்பட்டது.

*************

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு பேருக்கு தலா 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு பேரைக் கைது செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த இரண்டு பேரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஒவ்வெரு சாரதிக்கும் தலா 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

*************

கிளிநொச்சியில் மதுபோதையில் ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்தியவருக்கு 9 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்டவருக்கு 20 ஆயிரம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த ப்குதியில் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திச் சென்று விபத்தை ஏற்படுத்திய சாரதி ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பாதிக்கப்பட்டவருக்கு 20 ஆயிரம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் மதுபோதையில் ஆபத்தான முறையில் விபத்தொன்றைத் தடுக்காமல் வாகனம் செலுத்தியமைக்காக 9 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதியனுமதிப்பத்திரத்தை ஒரு மாத காலம் இடைநிறுத்தி வைக்குமாறும் நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

*************

கிளிநொச்சியில் பாலை மரத்தீராந்திகளை வைத்திருந்த இரண்டு பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் சுமார் 18 ஆயிரத்து 682 ரூபா பெறுமதியான பாலை மரந்தீராந்திகளை வைத்திருந்த ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இரண்டு பேருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

*************

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் ஆறாவது தடவையாகவும் அரச சீல் சாராயம் பணத்திற்கு விற்பனை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மூன்று மாத கால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் ஏற்கனவே ஐந்து தடவைகள் அரச சீல் சாராயத்தை விற்பனை செய்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் தண்டிக் கப்பட்ட போதும் மீளவும் அரச சீல் சாராயத்தை விற்பனை செய்தமை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதுடன் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று மாத கால கட்டாயச்சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

*************

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் 18 ஆயிரத்து 850 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் 18 ஆயிரத்து 850 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்த ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து தருமபுரம் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமையான சூழலை உருவாக்குவதற்கு வீடுகளில் மரக்கன்றுகளை நாட்டுங்கள்

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் வேண்டுகோள்



(பரந்தன்)

மாணவர்களே உங்களது வீடுகளிலே இரண்டு மரக்கன்றுகளை நடுவதன் மூலம் எமது பிரதேசத்தில் பசுமையான சூழலை உருவாக்க முடியும். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீடுகளில் இரண்டு மரக்கன்றுகளையாவது நாட்டுங்கள் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற " வனறோபா " தேசிய மரம் நடுகை மாவட்ட மட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய காலங்களில் புரட்டாதி, ஐப்பசி ஆகிய மாதங்களில் இருந்து தை மாதம் வரையான காலப் பகுதியை மழைகாலம் அல்லது மாரிகாலம் என்று கூறுவார்கள். ஆனால் இன்று மார்கழி மாதத்தில் நாளைக்காவது மழை வருமா? என எண்ணும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமைக்கு காடுகளின் அடர்த்தியின்மை காரணமாகும்.

இந்நிலைமையை சீரமைப்பதற்காகவே தேசிய ரீதியில் " வனறோபா &quot மரம் நடுகைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இத்திட்டத்தின் ஊடாக 75 ஆயிரம் மரக் கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றோம் என குறிப்பிட்டார். மேற்படி நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் மரக் கன்றுகள் வழங்கப்பட்டதோடு பாடசாலை வளாகத்தில் மரக் கன்றுகளும் நாட்டப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக பிரதம கணக் காளர், மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி வனவளத் திணைக்கள அதிகாரிகள், கமநலத் திணைக்கள அதிகாரிகள், வட்டக்கச்சி மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312-277)

# நூல்கள் வெளியீட்டு விழா

(மல்லாவி)

மல்லாவியில் எழுத்தாளர் அனாதியன் எழுதிய இரு நூல்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியின் மயில்வாகனம் ஞாபகார்த்த கலையரங்கில் மு/முத்தையன்கட்டு வலது கரைப் பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் போது, அனாதியன் எழுதிய "மனித விலங்கொன்றின் நாட்குறிப்பில் இருந்து", "சீயக்காய் வாசக் காரியும் சில வண்டுக் காதலனும்" ஆகிய இரு நூல்களுமே வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி தி வேல்நம்பி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், வர்த்தக சங்கத்தினர், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பொது மக்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஆதலால் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (2-15)

# பண்டாரிக்குளம் வாள்வெட்டு; மேலும் மூவர் கைதாகினர்

(குருமன்காடு)

வவுனியா பண்டாரிக் குளத்தில் இடம்பெற்ற வாள் வெட்டு தொடர்பில் மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, பண்டாரிக் குளம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் மற்றும் அச்சுறுத்தல் விளைவித்தமை தொடர்பில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் இச்சம்பவம் தொடர்பில்கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, பண்டாரிக் குளம் பகுதியில் அண்மையில் இரவுவேளை இளைஞர்கள் சிலர் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடுகளை துணியால் மறைத்து கட்டிவிட்டு வீதியில் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன், வியாபார நிலையம் ஒன்றையும் சேதப்படுத்தியிருந்தனர். இச்சம்பவத்தில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் இச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் ஆறுபேரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் தொடர்ந்தும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பொலிஸார் தேடி வந்த நிலையில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டு அவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் இன்னும் சிலர் கைது செய்யப்படுவார்கள் எனவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# இவ்வாண்டு 227 மில். ரூபா செலவில் 102 வேலைத் திட்டங்கள் ஆரம்பிப்பு

## முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத் தகவல்படி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக இவ்வாண்டு 227 மில்லியன் ரூபா செலவில் 102 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டு அதிகளவான மக்கள் வாழும் விவசாய மாவட்டமான முல்லைத்தீவு மாவட்டத்தின் கடந்த கால யுத்தம் காரணமாக பாரிய மற்றும்நடுத்தர சிறிய குளங்கள் சேதமடைந்த நிலையிலும் நீண்டகாலம் புனரமைப்பின்றியும் காணப்பட்டன.

மக்களின் மீள்குடியமர்வையடுத்து பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த ஆண்டுகளிலும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாண்டு முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக 227 மில்லியன் ரூபா செலவில் 102 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாய அமைச்சின் ஊடாக 45 மில்லியன் ரூபா செலவில் கமநலசேவை நிலையங்களின் கீழுள்ள 12 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை மீள்குடியேற்ற அமைச்சினது 90 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 35 சிறிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கமத்தொழில் அமைச்சின் கீழ் 13 மில்லியன் ரூபா செலவில் நான்கு குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நல்லிணக்க அமைச்சினூடாக 6 மில்லியன் ரூபா செலவில் நான்கு குளங்களும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம் என்ற அடிப்படையில் 9 மில்லியன் ரூபா செலவில் 18 வேலைத் திட்டங்களும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினது 32 மில்லியன் ரூபா செலவில் நந்திக்கடல் உவர் நீர்த்தடுப்பணை அமைத்தல், சேதமடைந்த ஆறு குளங்களை புனரமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களும் உலக தரிசனம் நிறுவனத்தின் கீழ் 32 மில்லியன் ரூபா செலவில் வீதிகள், குளங்கள், நெல் உலர விடும் தளங்கள் என பத்து வேலைத் திட்டங்களும் இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)






முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன் குளத்தில். SOS சிறுவர் நிலையத்தினால் குடும்ப வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்ட அலுவலகம் நேற்றுமுற்பகல் 10.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, அனிஞ்சியன்குளப் பங்குத் தந்தை ஆகியோரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தினூடாக மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள், குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் குடும்ப வலுவூட்டல் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வாழ்வாதார உதவி

முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னி சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் நாட்டு உயிர்த்தெழுவோம் அமைப்பின் நிதியுதவியுடன் தண்ணீரூற்று கிராமத்தைச்சேர்ந்த இறுதிக்கட்டப் போரில் தாய், தந்தையரை இழந்த யுவதி ஒருவருக்கு குடிநீர் பற்றாக் குறையை நிவர்த்திக்க ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் குழாய்க்கிணறும் நீரை வெளியிலெடுப்பதற்கான மோட்டரும் அமைப்பின் தலைவர் நடராசா மதிவதனினால் வழங்கப்பட்டுள்ளது. (2)



கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் பாரதிபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு ஐந்து இலட்சத்து 20 ஆயிரத்து 650 ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. குறித்த அன்பளிப்பு நிதிக்கான காசோலையை கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன், சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ். துரைசிங்கம், சங்கத்தின் செயலாளர் பெனடிக்ற் மனோகரன் ஆகியோர் இணைந்து ஆலய நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

# வாகன விபத்தில் மூவர் படுகாயம்

வவுனியா- மதவு வைத்த குளத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்று முற்பகல் 10 மணியளவில் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து கண்டி வீதியூடாக மதவாச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளின் பின்புறமாக அதே பாதையில்பயணித்த கார்ஒன்று மோதியதன் காரணமாக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்துள்ள நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ் தாக்குதல் கப்பற் படையணியுடன்

# அமெரிக்க யுத்தக் கப்பல் இன்று இலங்கை வருகிறது

(கொழும்பு)

அமெரிக்காவின் விமானம் தாங்கி கப்பலான யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ் இலங்கைக்கு இன்று விஜயம் செய்கிறது.

யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ் தாக்குதல் கப்பற்படையணி இன்று திட்டமிடப்பட்ட துறைமுக விஜயமாக, கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.



கொழும்பு துறைமுகத்திற்கு இன்று வருகை தரவுள்ள யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ் தாக்குதல் கப்பற் படையணி எதிர்வரும் 31ஆம் திகதி வரை கொழும்பில் தரித்து நிற்கவுள்ளது.

தாக்குதல் கப்பற்படையணியில் யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ், வேக யுத்தக் கப்பலான யு.எஸ்.எஸ்.பிரின்ஸ்டன், நாசகாரிக் கப்பல்களான யு.எஸ்.எஸ்ஹவார்ட், யு.எஸ்.எஸ் ஷூப், யு.எஸ்.எஸ் பிங்க்னே மற்றும் யு.எஸ்.எஸ் கிட் ஆகியன இடம்பெற்றுள்ளன.

இந்தக் கப்பல்கள், இலங்கை மற்றும் அமெரிக்கக் கடற்படையினருக்கு இடையில் மேம்பட்டு வரும் நல்லுறவின் பிரதிபலிப்பாக, கடந்த 1985 ஆம் ஆண்டிற்கு பின்னர் முதன்முறையாக இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

அண்மையில் நிறைவடைந்த மிதக்கும் தயார் நிலை மற்றும் பயிற்சிக்கான கூட்டுறவு என்ற இருதரப்பு கூட்டுப் பயிற்சிகளைத் தொடர்ந்து இந்த விஜயம் அமைந்துள்ளது.

விமானந்தாங்கி தாக்குதல் படையணியின் விஜயத்தின் போது, விநியோகப் பண்டங்கள் கொள்வனவு மற்றும் ஆயிரக்கணக்கான அமெரிக்கப்படையினர் உள்ளூர் வியாபாரிகளுக்கு உதவுவது மூலம் இலங்கை வர்த்தகத்தில் ஏறத்தாழ 1.54 ட்ரில்லியன் ரூபா வருமானம் ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது அமெரிக்கப் படையினர் உள்ளூர் சமூகத்தை தெரிந்து கொள்வதுடன், இலங்கைக் கடற்படையினரையும் சந்திக்கவுள்ளனர்.

துறைமுகத்தில் தரித்து நிற்கும் வேளையில் அமெரிக்கக் கடற்படையினர் உள்ளூர் தன்னார்வங்களுடன் இணைந்து வைத்தியசாலை, அநாதை இல்லங்கள் மற்றும் பல இடங்களில் சமூக சேவைப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ் விமானம் தாங்கிக் கப்பல் அடியில் இருந்து பாய்மர நுனிவரை 23 மாடிக்கட்டட உயரமுடையதுடன் 333 மீற்றர் நீளமுடையது.

இக்கப்பலில் 5,000 பேருக்கு மேல் பயணிக்க முடிவதுடன், கப்பல் சமையலறைகளில் ஒரு நாளில் 18,000 பேருக்கான உணவு சமைக்க முடியும்.

ஒரு நாளில் 1.5 மில்லியன் நன்னீரை உற்பத்தி செய்வதுடன், ஒரு வாரத்தில் 1,500 பேருக்கு சிகை அலங்காரங்களை செய்யக்கூடிய வசதி காணப்படுகின்றது.

யு.எஸ்.எஸ்.நிமிட்ஸின் தாய்த் துறைமுகம் வோஷிங்டன் மாநிலத்தில் அமைந்துள்ளது.

இலங்கையின் சுயமான நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாடுகள் முன்னேறும் இக்கட்டத்தில், கடல்சார்ந்த நல்லுறவைக் கட்டியெழுப்புவதன் மூலம் இரு நாடுகளுக்கும் பொதுவான குறிக்கோள்களான பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியன மேம்படும் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு வர அமெரிக்க கடற்படையினருக்கு வாய்ப்புக் கிடைத்தமையை முன்னிட்டு தான் மகிழ்ச்சி அடைவதுடன், அற்புதமான மக்களைச் சந்திக்கவும் பாடசாலை, வைத்தியசாலை, ஓய்வு இல்லங்களில் நடைபெறும் பொதுப்பணிகளில் ஈடுபடுவது மூலம், சிறுவர் முதல்முதியோர்வரை அனைவரது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பெற்றுக் கொள்ளவுள்ள அனுபவத்தை எதிர்நோக்கி தமது குழுவினர் ஆர்வமாக உள்ளனர்" என தாக்குதல் படையணி 11 இன் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் கிறகரி ஹரிஸ் குறிப்பிட்டார்.

"எமது படையினரில் சிலர் மட்டுமே முன்னர் இலங்கைக்கு வந்துள்ளதால் ஒரு சாகச மற்றும் எதிர்பார்ப்பு உணர்வு மேலோங்கி உள்ளது.

எமது விஜயம் மூலம் இலங்கையுடனான கலாசார மற்றும் ஏனைய பரிமாற்றங்கள் மேம்படுவதுடன், நாம் புறப்பட்ட பின்பும் இவ்வுறவுகள் நீடித்து நிலைக்கும் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அபிவிருத்தியடைந்து வரும் உலகுடன் இலங்கையும் பயணிக்க வேண்டும்-பிரதமர்



(கொழும்பு)

தொழில் நுட்பத்துடன் இணைந்து அபிவிருத்தியடைந்து வரும் உலகுடன் கைகோர்த்து இலங்கையும் பயணிக்க வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேவி பாலிக்கா வித்தியாலத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, 13 வருட கால பாடசாலை கல்வியை கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பின்லாந்தின் கல்வி முறையை ஆராய்ந்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மேலும்இச்சவாலைவெற்றி கொள்வதற்கு நாட்டைப் பலப்படுத்தி அனைத்துத் துறைகளையும் நவீனமயப்படுத்தும் வேலை ஆரம்பமாகி உள்ளதாகவும் நவீன மயப்படுத்தலுடன் இணைந்து பயணிப்பதே காலத்தின் தேவை எனவும் அதிலிருந்து விலகிச் செல்ல முடியாதெனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜோன்ஸ்டன் எம்.பி வழக்கு டிசெம்பருக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சதோச ஊழியர்கள் சிலரை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வைத்ததன் மூலம் 4 கோடி ரூபா நிதிமோசடி செய்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010. 2014 ஆம் ஆண்டு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் 150 சதோச ஊழியர்களின் உத்தியோகபூர்வ வேலைக்கு பதிலாக அவர்களை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வைத்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்.கடற்படைத்தளபதியாக அதிக மற்றும் சொற்ப காலம் பதவிவகித்த இரு தமிழர்கள்





(கொழும்பு)

இலங்கைக் கடற்படை வரலாற்றில் தமிழர்களின் ஈடுபாடு மிகவும் குறைவான நிலையில் காணப்பட்டாலும் கடற்படையின் தளபதிகள் வரிசையில் இரண்டு தமிழர்கள் குறிப்பிடத்தக்க நேரெதிர் மையங்களாக விளங்குகின்றனர்.

அவர்களில் ஒருவர் மிக அதிக காலம் பதவியில் இருந்தவராகவும் மற்றொருவர் மிக சொற்ப காலம் பதவியில் இருந்தவராகவும் விளங்குகின்றனர். அதே நேரம் இரண்டு பேரும் மட்டுமே கடற்படையின் தளபதிகளாகப் பதவி வகித்த தமிழ் அதிகாரிகளாவர்.

மிக நீண்ட காலம் கடற்படைத் தளபதியாக இருந்தவர் ரியர் அட்மிரல் ராஜன் கதிர்காமர், அதேபோல் மிக சொற்ப காலம் பதவியில் இருந்தவர் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா.

யாழ்ப்பாணத்தில் பிறந்த ராஜன் கதிர்காமர் 1960 தொடக்கம் 1970ஆம் ஆண்டுவரை பத்து ஆண்டுகள் கடற்படைத் தளபதியாக இருந்துள்ளார். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் சகோதரர்களில் ஒருவர். ராஜன் கதிர்காமருக்கு லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட மூன்று ஆண் சகோதரர்கள் இருந்துள்ளனர். நால்வரும் அரச மற்றும் அரசாங்கத் துறைகளில் முக்கிய பங்கினை வகித்தவர்களாவர்.

ராஜன் கதிர்காமர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற போதுதான் அவருக்கு ரியல் அட்மிரல் பதவியும் வழங்கப்பட்டது. தற்பொழுது மிகச் சொற்ப காலம் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ட்ரவிஸ் சின்னையா வைஸ் அட்மிரல் பதவியிலிருந்து அட்மிரலாக பதவியுயர்வு பெற்றுள்ளார். சின்னையா பதவியில் இருந்த காலம் வெறும் இரண்டு மாதங்களும் நான்கு நாட்களும் மட்டுமே.

கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி புதிய கடற்படைத் தளபதியாக பொறுப்பேற்று அண்மையில் ஓய்வுபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கிணற்றிலிருந்து இளைஞன் சடலமாக மீட்பு

(குருமன்காடு)

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் உள்ள வீட்டுக் கிணற்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, உக்குளாங்குளம் இரண்டாம் ஒழுங்கையில் வசிக்கும் வர்த்தகரான இளைஞர் ஒருவர் கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை முதல் காணாமல் போயிருந்ததாக இளைஞனின் தாயாரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று குறித்த இளைஞனின் தாயார் தமது வீட்டுக் கிணற்றடியில் இளைஞன் அணியும் செருப்பு இருந்ததை அவதானித்து விட்டு கிணற்றை உற்று பார்த்த போது குறித்த இளைஞனின் சடலம் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பண்டாரிக்குளம் பொலிஸார் விரைந்து வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

தற்போது விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்களில் ஈடுபட்ட 25 இராணுவ அதிகாரிகளை கைது செய்யுமாறு கோரிக்கை

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட 25 இராணுவ அதிகாரிகளை கைது செய்ய கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த 25 இராணுவ அதிகாரிகளும் வெளிநாட்டு விஜயங்களில் ஈடுபட்டால், அவர்களை கைது செய்யுமாறு முன்னாள் ஐக்கிய நாடுகளின் அதிகாரி ஜஸ்மின் சூக்கா சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும் போலி அறிக்கை சமர்ப்பித்து இந்த கோரிக்கை விடப்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் பிரதிநிதியின் கருத்தின் ஊடாக இந்த தகவல் வெளியாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

30 ஐரோப்பிய நாடு கள் சர்வதேச உலக பேரவை யில் கையொப்பமிட்டுள்ளது. அது ரோம பேரவைக்கு வெளியே உள்ள சட்டமாகும்.

இவ்வாறு போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள் 25 இராணுவத்தினரில் 6 பேர் மேஜர் ஜெனரல்களாகும் என குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# எமக்கு எதிராக மக்களை தூண்டி விடுகின்றனர்

## திகாம்பரம் புலம்பல்



(கொழும்பு)

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாலேயே ஹற்றனில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் பூல்பேங்க் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றும் தொண்டமானின் பெயரை எடுக்க வேண்டும் என்பது தனது நோக்கம் அல்ல எனவும் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் திகாம்பரம் தெரிவித்தார்.

ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில், அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மலையக மக்களுக்கு குறிப்பாக பெருந்தோட்ட மக்களுக்கு எனது அமைச்சின் ஊடாக பாரிய அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்க்கு பாதிப்பு ஏற்பட்டு வருவதாக தெரிகின்றது.

மலையகத்தின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பெயர் சூட்டப்பட்ட ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் பூல்பேங்க் என பெயர் மாற்றம் செய்யப்பட்டதே தவிர தொண்டமானின் பெயரை அங்கிருந்து எடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை.

தொண்டமான் பௌன்டேஷன் ஊடாக வருடமொன்றுக்கு 20 கோடி ரூபாய் மோசடி செய்தவர்களே இவ்வாறான கலவரங்களை மக்கள் மத்தியில் தூண்டி விடுகின்றனர். நான் அமைச்சு பொறுப்பை ஏற்ற பிறகு மூன்று நிறுவனங்கள் எனது அமைச்சின் கீழ் வந்தது.

இதில் பூல்பேங்கும் ஒன்றாகும். ஆகையால் தொண்டமான் பௌண்டேஷன் என்பது ஒரு குடும்பத்திற்குரியது அல்ல. தொண்டமான் பௌன்டேஷன் கீழ் இயங்கும் ஹற்றன் தொழிற்பயிற்சி நிலையம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் எனது அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற பின்பே இங்கு பெயர் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள தேர்தலை இலக்காக கொண்டு இவர்கள் மக்களை எனக்கு எதிராக தூண்டி விடுகின்றார்கள். எனக்கு பயம் காட்ட முடியாது. நான் ஆரம்பித்தால் இவர்கள் ஓட வேண்டும். மக்களுக்கு எமது சேவைகள் என்னவென்று விளங்கும். மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். ஆகையால் நாம் நல்ல விடயங்களை செய்து வருகின்ற நிலையில் எமக்கு எதிராக மக்களை தூண்டி விடும் நிகழ்வுகள் நடந்தேறுகின்றன.

மலையகத்தில் புதிய வீடுகள் அமைத்து மக்களுக்கு வழங்கி வருகின்றோம். அதேபோன்று நுவரெலியா பிரதேச சபையில் விரிவாக்கல் தொடர்பிலும் பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம். இது இ.தொ.காவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

அதற்காக மக்களை தூண்டி விட்டு அவர்களை வீதிக்கு இறங்க வைத்து எமக்கு எதிராக செயற்படுகின்றனர் என தெரிவித்த அமைச்சர் மக்களுக்கு செய்கின்ற சேவைகள் அடிப்படையில் மக்கள் தெளிவாக இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒரே இலக்கத்தில் இரு அடையாள அட்டைகள்

(கொழும்பு)

ஒரே இலக்கத்தில் இரு தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக, ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குருதெனிய சிங்ஹாரகம 10 ஏக்கர் பகுதியை சேர்ந்த, ஏக்கநாயக்க முதியன்சலாகே புஞ்சிரத்ன என்ற நபரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த நபர், அரச வங்கியொன்றில் சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பிக்க சென்றுள்ளார்.

இதன்போது தனது தேசிய அடையாள அட்டையை, வங்கி உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய அவருக்கு சிறிது நேரத்தில் அதிர்ச்சியான செய்தி கிடைத்துள்ளது.

குறித்த அடையாள அட்டையின் இலக்கத்தில் தெஹியத்த கண்டி பகுதியில் பிறிதொரு நபர், சேமிப்பு கணக்கு ஒன்றிற்கான உரிமத்தினை பெற்றுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அதிர்ச்சிக்குள்ளான குருதெனிய பகுதியை சேர்ந்த நபர், வங்கி உத்தியோகத்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

ஆட்பதிவு திணைக்களத்திற்கு சென்று முறைப்பாடு செய்யுமாறு, வங்கி ஊழியர்கள் பணித்துள்ளதோடு, ஆட்பதிவு திணைக்களம் கோரும் பட்சத்தில் ஒரே இலக்கத்தில் காணப்படும் பிறிதொரு அடையாள அட்டை தொடர்பான விபரங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர், தனது முதலாவது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் 8500 ரூபாய் ஆகியன கண்டியில் தவறவிட்டதாகவும், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

புதிய சோனக தெரு ஜே/88 முதியோர் சங்கத்தின் முதியோர் தின விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு அறவொளிக் கலையரங்கத்தில் முதியோர் சங்கத் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவதர்சினி, யாழ். பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் செல்வி. வசந்தி இலட்சுமணன், ஜே/88 புதிய சோனக தெரு கிராம அலுவலர் ர.சல்பீர், யாழ். பிரதேச செயலக ஜே/88 பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர் ப.பார்த்தீபன், ஜே/88 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயகல,ா யாழ்.பிரதேச மட்ட முதியோர் சங்க தலைவர் அ.இராசநாயகம், யாழ். பிரதேச மட்ட முதியோர் சங்க செயலாளர் சு. கணே சலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# மைத்திரியுடன் இணைகிறாரா மகிந்த?

## நாளை விசேட கூட்டம்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட சந்திப்பு ஒன்று அடுத்த மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதன்போது அடுத்து வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் சம்பந்தமான விசேட தீர்மானங்கள் பல எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிர்க்கட்சியின் விசேட சந்திப்பு ஒன்று நாளை இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் விசேட சந்திப்பில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்வதா? என்பது தொடர்பில் இதன்போது தீர்மானிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (இ-7)

# கமாலின் கொலை வெறியால் குழப்பத்தில் மகிந்த அணியினர்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான வியத்மக அமைப்பின் கூட்டத்தில் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவினால் வெளியிட்ட கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


கடந்த 21ஆம் திகதி கம்பஹாவில் கோத்தபாய தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன உரையாற்றிய போது.. புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஆதரவாக இருப்போர் துரோகிகள் எனவும், அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு கௌரவமான இறுதிச்சடங்கிற்கு இடமளிக்கக் கூடாது.

இந்தப் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவோர், அதற்கு ஆதரவு வழங்குவோர் நாட்டுக்குத் துரோகம் இழைத்தவர்களாவர் என கமால் குணரத்ன தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தானது மகிந்த குடும்பத்திற்குள் அப்பால் கூட்டு எதிர்க்கட்சிக்குள் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. பசில் ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட பொதுஜன பெரமுன கட்சியின் வெற்றிகரமான பிரசாரத்திற்கு இது பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இனவாத கொள்கைகளை கொண்ட சிலர் அரசியல் தெளிவற்ற கோத்தபாயவை பிழையாக வழி நடத்தி பிரபலமடைய முயற்சிப்பதாக அதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கமால் குணரத்ன வெளியிட்ட கருத்தினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகிய இருவரும் கடும் கோபத்தில் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.



அத்துடன் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அந்த கருத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதுடன். கோத்தபாயவின் வியத்மக அமைப்பிற்கு உதவுவதனை நிறுத்துமாறு மகிந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கமால்குணரத்னவின் கருத்துக்கு அரசியல் சார்ந்த பலரும் வன்மையான கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மெர்சலுக்கு சாதகமாக தீர்ப்பு



(சென்னை)

திரைப்படத்தில் வசனாங்களை வைப்பது அவரவர் கருத்துரிமை ஆகும். அதில் யாரும் தலையிட முடியாது எனக்கூறி மெர்சல் படத்திற்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்தது நீதிமன்றம்.

மெர்சல் திரைப் படத்திற்கு வழாங்கப்பட்டுள்ள தணிக்கை சான்றிதழை மீளப் பெறக்கோரி, 'சட்டத்தரணி அஸ்வத்தமன்' தொடர்ந்த பொதுநல வழக்கு, நேற்று நீதிபதி 'எம்.எம்.சுந்தரேஷ்' முன்னிலையில் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்திருந்த நீதிபதி,

திரைப்படங்களில் குடி, போதைக்கு முக்கியத்துவம் கொடுப்பது. மாற்றுத் திறனாளிகளை தவறாக சித்தரிப்பது. போன்ற விடயங்களுக்கு பொதுநல வழக்கு தொடுக்காதது ஏன்?

'இந்தப் படத்தில் மக்களைப் பாதிக்கும்படி எந்த விடயமும் இடம்பெறவில்லை.

இது வெறும் படம் தான். இதில் வரும் வசனாங்களை எவரும் கண்மூடித்தனமாக நம்பமாட்டார்கள். படத்தில் என்ன. வசனாங்கள் இடம்பெற வேண்டும் என்பது குறித்து தணிக்கை குழுவிற்கு நன்கு தெரியும்.

எனவே மக்களை பாதிக்கும் விடயாங்களுக்கு வழக்கு தொடுங்கள். தேவையின்றி ஒரு படத்தை விளம்பரம் செய்யாதீர்கள்.

அத்தோடு நீதி மன்றத்தை பொதுமேடை ஆக்காதீர்கள் என உத்தர விட்டார் நீதிபதி." அதன் பின்னர் வழக்கை தள்ளு படி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 'ஜெ' மர்ம மரணம் குறித்த விசாரணைத் திகதி அறிவிப்பு





(சென்னை)

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் குறித்த விசாரணையை, நாளை மறுதினம் 30 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளதாக, நீதிபதி ஆறுமுகசாமி தெரிவித்துள்ளார்.

விசாரணைக்காக ஒதுக்கப்பட்ட 'சேப்பாக்கம் எழிலக வளாகத்தில் உள்ள கல்சா மகாலில்', கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி விசாரணை இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் விசாரணை இடம்பெறாத நிலையில், நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) ஊடகவியலாளர்களை சந்தித்து பேசிய ஆறுமுகசாமி, விசாரணைத் திகதியை உறுதிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசாரணையில் வெளிப்படைத் தன்மை இருக்கும். ஊடகங்கள் ஒத்துழைத்தால் விசாரணையை உரிய காலத்தில் முடிக்க முடியும். அத்துடன் இந்த விசாரணைக்காக அரசு ஒரு கால அளவினை ஒதுக்கியுள்ளது. அதற்குள் முடிக்க வேண்டும்.

மேலும் ஜெயலலிதா மரணம் குறித்த தகவல்களை வழாங்க விரும்புவோர், நேரில் ஆஜராகியோ அல்லது பதிவு தபால் மூலமோ அளிக்கலாம்.

ஆனால் எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதிக்குள் தகவல்களை வழாங்க வேண்டும்.

விசாரணை நேர்மை யாக வும், வெளிப்படையாகவும்இருக்கும்என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வடகொரியா மீதான பொருளாதாரத் தடையால் குடிமக்களுக்கு பாதிப்பு

### ஐ.நா. சிறப்பு விசாரணை அதிகாரி எச்சரிக்கை



(பியாங்யாங்)

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணு வாயுதப் பரிசோதனைகளைத் தொடர்ந்து, அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையானது, சாதாரண குடிமக்களைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது என, ஐ.நா. வின் சிறப்பு விசாரணை அதிகாரி தோமஸ் குயின் டானா எச்சரித்துள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் மனித உரிமைகள் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் உரையாற்றிய போது, 'வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுதப் பரிசோதனைகளைத் தொடர்ந்து, அந்நாட்டின் மீது ஐ.நா. பாதுகாப்புச்சபையால் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வடகொரியாவுக்கு முக்கிய உதவிப் பொருட்களை வழாங்குவதில் தடை காணப்படுகின்றது. இதன் காரணமாக குறிப்பாக, கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட ஏனைய குடிமக்களும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்" என்றார்.


அத்துடன், நோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் திட்டாங்களை மேற்கொள்ளும் மனித உரிமைகள் குழுவின் உறுப்பினர்களும் வடகொரியா மீதான பொருளாதாரத் தடையால், தங்கள் பணியை முன்னெடுப்பதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். இது தொடர்பில் நான் கவனம் செலுத்தியுள்ளேன்' எனவும் அவர் கூறியுள்ளார்.

வடகொரியா மீதான பொருளாதாரத்தடையால், அந்நாட்டிலுள்ள குடிமக்கள் தண்டனையை அனுபவித்து வரும் அதேவேளை, அவர்கள் பேரழிவை எதிர்நோக்கக் கூடிய வாய்ப்புண்டு.

எனவே, பொருளாதாரத் தடை நடைமுறைகளை மீண்டும் முழுமையாக மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# இந்தோனேசியாவில் பட்டாசு ஆலையில் தீ

## 50 பேர் கருகிப் பலி!





(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டில் டாங்ஜெராங்க என்ற இடத்திலுள்ள பட்டாசு உற்பத்தி தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 50 பேர் பலியாகினர்.

இந்தோனேசியா நாட்டில், ஜகார்த்தா நகருக்கு தென்மேற்கில் தாங்கராங் என்ற இடத்தில் ஒரு பட்டாசு ஆலை இயங்கி வந்தது.

இந்த பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் வழக்கம் போல தொழிலாளர்கள்வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில்பட்டாசு வெடித்து தீப்பிடித்தது. இதில் அங்கிருந்த பட்டாசுகள் வெடித்து, நாலாபுறமும் சிதறின. அந்த ஆலையின் மேற்கூரை பறந்தது.

இந்த தீ விபத்தில் தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினரும், மீட்புப் படையினரும் விரைந்து வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் 50 தொழிலாளர்கள் உடல் கருகி பலியாகினர். அவர்களது உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு உருக்குலைந்து போயின.

படுகாயமடைந்த நிலையில் 35 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடம் அளிக்கிற வகையில் இருப்பதால், பலி மேலும் உயரும் என தகவல்கள் கூறுகின்றன.

இந்த பட்டாசு ஆலை கடந்த 6 வாரங்களாகத்தான் இயங்கி வந்ததாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

விபத்து நடந்தபோது 103 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்ததாக தெரியவந்துள்ளது. (இ-7)

## வடகொரியா
## அமெரிக்கா கட்

(வோஷிங்டன்)

வடகொரியாவின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் அமெரிக்காவின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என, தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று வெள்ளிக் கிழமை சென்றுள்ள அமெரிக்கப் பாது காப்புச் செயலாளர் ஜேம் மாட்டிஸ்க்கும் தென்கொரிய ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில், 'அண்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ஆஸி பிரதிப் பிரதமரின் தெரிவு சட்ட ரீதியற்றது

### நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு



(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் பிரதிப் பிரதமர் Barnaby Joyce உட்பட நான்கு அரசியல்வாதிகள் சட்ட ரீதியற்ற முறையில் தெரிவுசெய்யப் பட்டுள்ளதாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவர்கள் இரட்டைக் குடியுரிமையை பெற்றிருந்தமை காரணமாகவே, இவர்களின் தெரிவு சட்ட ரீதியற்றது எனவும் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள், அவுஸ்திரேலியாவில் தேர்தலில் தெரிவுசெய்யப்படுவதற்கு அந்நாட்டு அரசியலமைப்பு தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜோன் கெனடி தொடர்பான 3000 ரகசிய கோப்புக்களை வெளியிட்டார் ட்ரம்ப்

### அமெரிக்காவில் பெரும் பரபரப்பு





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் கெனடி கொலை தொடர்பான 3000 இரகசிய கோப்புக்களை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்த ஜோன் எப்.கெனடி, 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி ஆஸ்வால்டு என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இருப்பினும் கெனடி படுகொலை குறித்து பல்வேறு கருத்துக்கள், அதன் பின்னணி போன்றவை குறித்த சந்தேகங்கள் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக எழுப்பப்பட்டு வருகிறது.

இது தொடர்பான் அலுவல் ரீதியான கோப்புக்களை அமெரிக்க அரசாங்கம் இரகசியமாக பாதுகாத்து வருகிறது.

இந்த நிலையில் ஜோன் கெனடி சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான இரகசிய கோப்புகளை, வெளியிடத் தகுந்த கோப்புகளாக மாற்றம் செய்து பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப் போவதாக ஜனாதிபதி ட்ரம்ப் சமீபத்தில் அறிவித்தார். அதன்படி, ஜோன் கெனடி சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான இரகசியக் கோப்புக்களை விடுவிக்க அனுமதி அளித்தார். இதையடுத்து அந்த கோப்புக்களை தேசிய ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ளது.

மீதமுள்ள கோப்புக்கள் வரும் வாரங்களில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை வெள்ளை மாளிகை செய்து வருகிறது.

எனினும் தேசிய பாதுகாப்பு காரணங்களைக் காட்டி சில இரகசியக் கோப்புக்களை விடுவிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மறுத்துவிட்டார்.

ஜோன் கெனடி கொலை தொடர்பான கோப்புகள் அனைத்தையும் வெளியிட வேண்டும் என 1992இல் சட்டம் இயற்றப்பட்டது.

இந்த சட்டப்படி 90 சதவீத ஆவணங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையில். தற்போதும் குறிப்பிட்ட ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனால் அமெரிக்காவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (இ-7)

## கென்ய ஜனாதிபதித் தேர்தல்; வாக்குப்பதிவு ஒத்திவைப்பு

(கென்யா)

கென்யாவின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வாக்களிப்பு நடைபெற்ற போதிலும், சில பகுதிகளில் மாத்திரம் வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளது. மேற்குக் கென்யாவில் எதிர்க்கட்சியினரின் பாதுகாப்பு அரணாக விளங்கும் இடங்களில் பாதுகாப்புக் காரணங்களை கவனத்திற் கொண்டு இன்று வரை வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையகம் அறிவித்துள்ளது.

கென்யாவில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதியான உஹுரு கென்யாட்டா அதிகளவான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார். அதேவேளை, இவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் ரைலா ஒடின்கா தேர்தலில் தோல்வி அடைந்திருந்தார்.

இந்தத் தேர்தலில் முறைகேடு இடம்பெற்றதாகக் கூறி எதிர்க்கட்சி தலைவர் ரைலா ஒடின்கா, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்ததைத் தொடர்ந்து, இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், மீண்டும் தேர்தலை நடத்த உத்தரவிட்டிருந்தது. இதனை அடுத்து, கென்யாவில் மீண்டும் நேற்று முன்தினம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது.

இருப்பினும், இந்தத் தேர்தலை எதிர்த்து எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதுடன், தேர்தலை பிற்போடுமாறும் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் தேர்தலை எதிர்க்கட்சித் தலைவர் புறக்கணித்துள்ளதுடன், தனது ஆதரவாளர்களுக்கும் தேர்தலை புறக்கணிக்குமாறு தெரிவித்திருந்தார். இதன் காரணமாக எதிர்க் கட்சியினரின் அரணாக விளங்கும் இடங்களில் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## நிச்சயம் சக்திவாய்ந்த ஐதரசன் குண்டுச் சோதனை நடத்துவோம்

### வடகொரியா எச்சரிக்கை



(பியாங்யாங்)

பசுபிக் பெருங்கடல் பகுதியில் சக்திவாய்ந்த ஐதரசன் குண்டுச் சோதனை நடத்தப்படும் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா சக்திவாய்ந்த அணுகுண்டுகளை அவ்வப்போது சோதித்து வருகிறது.

அமெரிக்காவின் அலாஸ்காவை குறிவைத்தே பெரும்பாலும் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்தன. மேலும் வடகொரியா மீது ஐ.நா. பொருளாதார தடைவிதிக்கவும் ஆதரவு தெரிவித்தன.

அமெரிக்காவின் பொருளாதார தடையால் கோபமடைந்த வடகொரியா தனது அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்து தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

வடகொரியாவை தடம் தெரியாமல் அழித்து விடுவோம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்திருந்தார். அதற்கு வடகொரியா எந்த பிரச்சினையையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக பதிலளித்தது.

மேலும் சக்திவாய்ந்த ஐதரசன் குண்டு சோதனை பசுபிக் பெருங்கடல் பகுதியில் நடத்தப்படும் என்று வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

வடகொரிய தலைவர்களின்பேச்சு உலகநாடுகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் வடகொரியாவின் வெளியுறவு அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் நாங்கள் நிச்சயம் பசுபிக் பெருங்கடல் பகுதியில் ஐதரசன் குண்டு சோதனையை நடத்துவோம். இது வெறும் வார்த்தையல்ல என உலக நாடுகளுக்கு மிரட்டல் விடுத்துள்ளார். வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரி யின் இந்த பேச்சு உலக நாடு கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே வடகொரியாவின் நடவடிக்கையால் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் போர் பதற்றம் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ...வின் நடவடிக்கைகளை ...டுப்படுத்தும் - தென்கொரியா



காலமாக கொரிய தீபகற்பம் மீது ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை வடகொரியா முன்னெடுத்து வந்திருந்தது. இருப்பினும், வடகொரியாவின் இந்த நடவடிக்கைகளை, அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுவந்த நடவடிக்கைகள் கட்டுப்படுத்தியுள்ளன" என்றார்.

இதேவேளை, 'வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுத அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தென் கொரியா வைப் பாதுகாப்பதற் கான அமெரிக்காவின் கொள்கை யில் எந்தவித மாற்றமும் இல்லை. எனவே, தென்கொ ரியாவை அமெரிக்கா தொடர்ந்து பாதுகாக்கும்' எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## கண்டம் விட்டு கண்டம் பாயும் 4 ஏவுகணைகளை செலுத்தியது ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்யா கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த 4 ஏவுகணைகளை ஒரே நேரத்தில் வீசி சோதனை நடத்தியுள்ளது. இந்த ஏவுகணைகள் அனைத்தும் நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடியவை.

வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணை சோதனைகள் நடத்தி வருகிறது. இதற்கு அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. வடகொரியா மீது ஐ.நா. பொருளாதார தடை விதித்து உள்ளது.

இந்த நிலையில் ரஷ்யா கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த 4 ஏவுகணைகளை ஒரே நேரத்தில் வீசி சோதனை நடத்தியுள்ளது. இந்த ஏவுகணைகள் அனைத்தும் நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடியவை.

டியூ-160, டியூ-95 எம்.எஸ். மற்றும் டியூ-22 எம் 3' ஆகியவையும் நீர்மூழ்கி கப்பலை தாக்கும் வகையிலான ஏவுகணைகளும் நேற்று முன்தினம் பரிசோதிக்கப்பட்டன.

இச்சோதனை ரஷ்யாவின் வடமேற்கில் உள்ள பிலெட்ஸ் ராணுவ தளத்தில் நடந்த வீரர்கள் பயிற்சியின் போது நடத்தப்பட்டது. இவை கஜகஸ்தானில் உள்ள குரா என்ற இடத்தில் உள்ள சோதனை மையத்தை குறி வைத்து தாக்கின.

எனவே இந்த சோதனை வெற்றிகரமாக நடந்ததாக ரஷ்ய ராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் ரஷ்யா 'தொபோல்' ரக ஏவுகணைகளை வீசி பரிசோதித்தது. இதுவும் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் திறன் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவ கட்டார் இணக்கம்; 7 புரிந்துணர்வு உடன்பாடுகள் கைச்சாத்து





(டோஹா)

துறைமுகங்கள், உட்கட்டமைப்பு துறைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு இலங்கைக்கு உதவ கட்டார் இணக்கம் தெரிவித்துள்ளது. கட்டாருக்கான இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கட்டார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமாட் அல் தானி இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

டோஹாவிலுள்ள கட்டார் ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இருதரப்புக் கூட்டத்துக்குப் பின்னர் இரண்டு நாடுகளின் தலைவர்களும் தனித்தனியாகவும் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் போது ஸ்ரீலங்கன்விமானசேவையை பங்குடைமை அடிப்படையில் இணைந்து செயற்படுத்தவும் கட்டாரில் வாழும் இலங்கையர்களின் பிள்ளைகள், இலங்கை பாடத்திட்டத்தைக் கற்பதற்கான பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவும் உதவுமாறு கட்டார் அமீரிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

இதுபற்றிக் கவனம் செலுத்துவதாக கட்டார் அமீர் உறுதியளித்துள்ளார். அத்துடன் 7 புரிந்துணர்வு உடன்பாடுகளும் இந்தச் சந்திப்பின் போது இரண்டு நாடுகளுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டுள்ளன.

முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அந்த நாட்டின் பிரதமர் அப்துல்லா பின் நாசர் பின் கலீபா அல்தானி சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

டோஹாவில் ஜனாதிபதி தங்கியிருந்த விடுதிக்குச் சென்று கட்டார் பிரதமர் பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவுக்குச் செல்கிறார் வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நாளை சீனாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யியின் அழைப்பை ஏற்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நாளை 29ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 4ஆம் திகதி வரை சீனாவில் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது திலக்மாரப்பனவின் சீனாவுக்கான முதலாவது அதிகாரபூர்வ பயணம். அவரது பயணத்துக்கு சீனா முக்கியத்துவம் அளிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனத் தலைவர்கள் திலக் மாரப்பனவைச் சந்திக்கவுள்ளனர். இருதரப்பு உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்பார் என்றும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அடிப்படை உரிமை மீறல் மனுவும் பிள்ளையானின் காலை வாரியது



(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கை 2018 மார்ச் 20ஆம் திகதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் தமக்கு பிணை வழங்கப்படாமல் அடிப்படை உரிமை மீறப்படுவதாக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று முன்தினம் நீதியரசர்கள் சிசிர ஆப்ரூ, பிரியந்த ஜெய வர்த்தன, விஜித் மலலகொட ஆகியோரின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

இதன்போது பிள்ளையான் தரப்பில் முன்னிலையான சட்டவாளர் சஞ்சீவ ஜெயவர்த்தன தமது கட்சிக்காரர் 746 நாட்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு மோசமாக நடத்தப்படுவதாகவும் கூறினார்.

இதன்போது சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான அரச சட்டவாளர், சுதர்சன டி சில்வா, ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் பிள்ளையானுக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

"இந்த வழக்கில் ஏழு பேர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. பிள்ளையான் ஏழாவது எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த வழக்கு எதிர்வரும் நவம்பர் 6,7,17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

இதையடுத்து, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கு முடிந்த பின்னர் 2018 மார்ச் 20ஆம் திகதி இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை விசாரிப்பதாக நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### அன்புத் தொல்லை தரலாமா?

எங்களுடைய குடும்ப நண்பர் ஒருவர் வீட்டிற்குப் போவது என்றாலே எனக்குப் பயம். காரணம் தலையைப் பார்த்ததும் அவர்கள் தலை காணாமல் போய்விடும். வேறு ஒன்றுமில்லை. நம்மைப் பார்த்ததுமே இவர்கள் ஏதாவது கலக்குவதற்கு அடுப்படிக்குப் போய் விடுவார்கள். நமக்கோ வயிற்றைக் கலக்கும்.

எல்லா நேரங்களிலும் எதையாவது குடித்து வைக்கும் மனநிலை நமக்கு இருப்பதில்லை. வயிறு சரியில்லை, பசியில்லை, தாகமில்லை சாப்பிடும் மனநிலை இப்போது இல்லை என்று என்ன காரணம் சொன்னாலும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் எதையாவது கலந்து கொண்டு வந்துவிடுவார்கள். இவர்களிடமிருந்து தப்பிக்கவே முடியாது.

இன்னும் சிலர் சமைக்கவே ஆரம்பித்து விடுவார்கள். பத்து நிமிசத்திலே சாதம் வடிச்சு, குழம்பு வைச்சு, பொரியல் தயார் பண்ணிடுறேன் என்பார்கள். சொன்னால் கேட்டுத் தொலைக்க மாட்டார்கள். வழியில் எங்காவது கண்டால் வாங்க பக்கத்தில் தான் எங்க வீடு என்று ஏழு கிலோ மீற்றர் தூரத்திற்கு அழைத்துப் போய் வீட்டில் உட்கார வைத்து சாவகாசமாகக் கதைகளைப் பேச ஆரம்பித்துவிடுவார்கள்.

புறப்பட ஆரம்பித்தால் இருங்க போகலாம் என்ன அவசரம் இப்போ? எப்பாவது தானே வர்றீங்க என்று கையமர்த்துவார்கள்.

இவற்றையெல்லாம் புரியாத்தனம் என்பதா? அன்பு என்பதா?

இதுபோன்ற சம்பவங்களை மெல்ல நான் அசை போட்டுப் பார்கிறேன். பல சம்பவங்களில் நான் இப்படி மாட்டிக் கொண்டு விழித்திருக்கின்றேன்.

அந்த நேரத்தில் சே...என்ன இப்படிச் செய்கிறார்கள் என்று நான் சலித்துக் கொண்டதுண்டு. எரிச்சலடைந்து ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளாத சந்தர்ப்பங்கள் கூட உண்டு.

ஆனால் எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவர்களது கனிவும் அன்புத்தான். இன்றைக்கு மீதப்பட்டு நிற்கின்றன. மாட்டிக் கொண்டு தவித்த நேரம் நான் பட்ட அவதிகள் இன்று கரைந்து காணாமல் போய்விட்டன. என்னமாய் உபசரித்தவர்கள்! என்பது தான் இப்போது எனக்குப் பெரிதாய்ப் படுகிறது. என்னைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட அன்புத் தொல்லைகளை நன்றாகவே தரலாம்.

ஆனால் அவர்கள் மிதமிஞ்சிய அவசரத்தில் இருந்தாலோ நம் உபசரிப்பை ஏற்றுக்கொள்ளும் மனநிலை சற்றும் இல்லாதிருந்தாலோ அவர்களை விட்டு விடலாம்.

மற்றவர்கள் என்ன மனநிலையில் இருந்தாலும் சரி நான் விழுந்து விழுந்து கவனிப்பேன் என்பது எதிர்விளைவையே ஏற்படுத்தும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனத்தை வேறாக்கி அதிகாரத்தை கைப்பற்றும் தேவை எமக்கு இல்லை

## நீதியமைச்சர் தலதா தெரிவிப்பு



(கொழும்பு)

இனம் மற்றும் மதங்களுக்கிடையில் வேறுபாட்டை உண்டாக்கி அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கம் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு ஒருபோதும் இல்லை என நீதியமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# இறுதித்தீர்வு குறித்து பேச்சு வார்த்தை நடத்த நேரம் ஒதுக்கித் தாருங்கள்

## ஜனாதிபதியிடம் வைத்தியர்கள் கோரிக்கை



(கொழும்பு)

இறுதித் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்த நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்கோரிக்கை விடுத்துள்ளது.

மாலபே தனியார் வைத்திய கல்லூரி தொடர்பில் வழங்கப்படவுள்ள தீர்வுத் திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவே ஜனாதிபதியடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேரம் ஒதுக்கக் கோரியுள்ளது.

ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாலபே தனியார் வைத்திய கல்லூரி தொடர்பான பிரச்சினைக்கு அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்ட மொன்றை முன்வைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது. இந்த தீர்வுத்திடடம் தொடர்பில் ஜனாதிபதியிடம் பேச்சுவார் த்தை நடத்த விரும்புவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

# புற்றுநோய் வைத்தியசாலையில் பூனைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

(கொழும்பு)

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையிலுள்ள சில நோயாளர் விடுதிகளில் பூனைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் சிகிச்சை பெற்றுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங் களை எதிர்நோக்குவதாக நோயாளிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சுற்றித் திரியும் பூனைகள் பகல்-இரவு வேளைகளில் நோயாளர் விடுதிகளிலுள்ள படுக்கைக்கு அடியில் இருப்பதாலும் அந்தப் பூனைகள் இருந்த இடத்தை சுத்தம் செய்வதிலும் கடும் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் நோயாளிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம். குமாரசிறி தெரிவிக்கையில்,

இந்த வைத்தியசாலை கிராமப்புறத்தை அண்மித்த பகுதியாகக் காணப்படுவதால் அப்பகுதியில் இருக்கும் வீடுகளிலுள்ள பூனைகள் வைத்தியசாலைக்கு வருகின்றன எனவும் இந்தப் பூனைகள் நோயாளிகள் இல்லாத விடுதிகளுக்கே வருவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.க.எம்.பி.சிசிர குமாரவுக்கு எதிராக ஆயர் பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர குமார அபேசேகரவுக்கு எதிராக சிலாபம் அம்பகலவிந்தமறை பிரதேச ஆயர் பீற்றர் பெதேஜு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தன்னை அச்சுறுத்தியதாக தெரிவித்து ஆயர் நேற்றுக்காலை சிலாபம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

அம்பகலவிந்த பிரதேசத்தில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டுகின்ற மணல் அகழ்வுக்கு எதிராக விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தனக்கு இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்ததாக ஆயரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர குமார பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

ஒட்டப்பட்ட சுவரொட்டியை கிழித்தெறிந்ததாகக் கூறி தனக்கு தெரிந்த சிலரை ஆலயத்தின் நிர்வாக அதிகாரிகளால்இழுத்துக்கொண்டு சென்றதாக அவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)

# மத்திய வங்கி மோசடி அடுத்த மாதம் முதல் 2-ம் கட்ட விசாரணை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் விசாரணையின் இரண்டாவது செயற்பாடுகளை ஆணைக்குழு ஆரம்பிக்கவுள்ளது.

2015 ஆம் ஆண்டில் மைத்திரி-ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்குவந்த பின்னர் பெப்ரவரி மாதம் இலங்கை மத்திய வங்கியில் விநியோகம்செய்தபிணை முறிகள் விற்பனையில் பாரிய நிதிமோசடி இடம்பெற்றதாக தகவல்கள் வெளிவர ஆரம்பித்தன.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தலைமையிலான கோப் குழு நடத்திய விசாரணையில் மத்திய வங்கியில் நிதிமோசடி இடம்பெற்றிருப்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து உடனடி விசாரணைகளுக்கான அழுத்தங்கள் பல தரப்பிலிருந்தும் விடுக்கப்பட்டு வந்ததை அடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை தொடங்கி வைத்தார்.

இதற்கமைய குறித்த ஆணைக்குழு பல மாதங்களாக விசாரணைகளை நடத்தியதுடன், இதில் 2015 ஆம் ஆண்டு நிதியமைச்சராகயிருந்த ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், வங்கியின் தற்போதைய ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி ஆகியோர் முதற்கட்டமான விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதனையடுத்து மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரது உறவினரும், இந்த மோசடியில் தொடர்புபட்டுள்ளதாக அறியப்படுபவருமான பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸும்விசாரணைக்கு அழைக்கப்பட்டதோடு இந்த மோசடியில் பலரும் சம்பந்தப்பட்டமை அம்பலப்படுத்தப்பட்டது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்களான கபீர் ஹாஷிம், மலிக் சமரவிக்கிரம ஆகியோர் மீதும் ஆணைக்குழு விசாரணை செய்திருந்தது.

இதுதவிர பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த மோசடியில் தொடர்புபட்டதாக வெளியான தகவலை அடுத்து அவருக்கான கேள்விகளை ஆணைக்குழு அனுப்பியதோடு அதற்கான பதிலை பிரதமர் அனுப்பிவைத்திருந்தார்.

இந்த நிலையிலேயே இரண்டாம் கட்ட விசாரணைகளை ஆணைக்குழு அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



தொற்றா நோய்களை இனங்கண்டு கொள்வதற்கான இலவச மருத்துவ முகாம் நேற்று நெல்லியடி புதிய சந்தைப்பகுதியில் இடம் பெற்றது. கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் குறித்த சந்தையில் வியாபாரம் மேற்கொள்ளும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் இலவச பரிசோதனை மேற்கொண்டனர். (படங்கள்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் கருத்துக்களுக்குப் பின்னரே அரசியலமைப்பு நாடாளுமன்றுக்கு வரும்

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு குறித்து பொது மக்கள் கருத்துக்களை அல்லது விமர்சனங்களை முன்வைத்ததன் பின்னரே புதிய அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சிவில் அமைப்புக்களின் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போதே பிரதமர் ரணில் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் 30 ஆம் 31 ஆம் மற்றும் முதலாம் திகதி களில் குறித்த அரசியலமைப்புச் சட்டம் குறித்துஇடம்பெறவுள்ளநாடாளுமன்றவிவாதத்தினை தொடர்ந்து பொது மக்கள் மீண்டும் கருத்துக்களை அல்லது விமர்சனங்களை முன்வைக்க முடியும் என பிரதமர் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்ட நடவடிக்கைகளின்போதுதாமும்நடுவுநிலையாக செயற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## விமலின் கட்சிப் பதவியை தூக்கியெறிந்தார் பியசிறி

(கொழும்பு)

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளராக செயற்பட்ட முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இதுகுறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயற்படப் போவதில்லை.

என்னை தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்க தேசிய சுதந்திர முன்னணி நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனினும், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட கூட்டத்தில் நானும் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ப்ரியன்ஜித் விதாரணவும் கலந்து கொள்ளவில்லை.

நாடாளுமன்றம் அரசியலமைப்பு சபையாக கூடும் போது அதிலிருந்து விலக தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்திருந்த நிலையில் அதற்கு தான் உடன்படவில்லை.

இதேவேளை, புதிய அரசிலமைப்பின் ஊடாக நாட்டைப் பிரிக்கும் விடயத்தை தோற்கடிக்க வேண்டுமாயின், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் ஜனாதிபதியிடமும் கலந்துரையாட வேண்டுமெனவும் அரசியலில்தொடர்ந்தும் ஈடுபடுவேன் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## வழக்குகளை வவுனியாவுக்கு மாற்றக்கோரி

# மூன்று அரசியல் கைதிகள் மேல் முறையீட்டு மன்றில் மனு

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த ஒரு மாதமாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகளும், தமக்கு எதிரான வழக்குகளை மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும்எனக்கோரி, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ள தமது வழக்குகளை மீண்டும் வவுனியா மேல்நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிடக் கோரி, திருவருள், சுலக்சன், தர்சன் ஆகிய மூன்று தமிழ் அரசியல் கைதிகளும், நேற்று முன்தினம் மேல்முறை யீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு எதிரான சாட்சிகளாக 67 பேர் பெயரிடப்பட்டுள்ளனர். அவர்களில் 64 பேர் பொலிஸார் மற்றும், இராணுவத்தினராவர்.

சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறி, இவர்களின் வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அநுராதபுரம் மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன.

இதனை எதிர்த்து, அவர்கள் கடந்த ஒரு மாதமாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற போதிலும், அரசாங்கம், வழக்குகளை மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மேல்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ள மூன்று அரசியல் கைதிகளும், "அநுராதபுரவில் எமக்கு எந்த உறவினர்களோ நண்பர்களோ இல்லை. எமக்கு தமிழ்மொழி மட்டுமே பேச முடியும். இதனால் அநுராதபுரம் நீதிமன்றத்தில் வழக்குகளை நாம் எதிர்கொள்வதும், எமக்கான சட்டவாளரைப் பெறுவதும் கடினம்.

எனவே அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நியாயமான விசாரணை நடக்காது என்று நம்புகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களமும், குற்றப் புலனாய்வுப் பிரிவும் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## சீன ஜனாதிபதிக்கு பிரதமர் வாழ்த்து



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீன நாட்டு ஜனாதிபதி ஜி ஜின்பின்னுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

சீன நாட்டு ஜனாதிபதி ஜி ஜின் பின் 2022 ஆம் ஆண்டு வரை சீனாவை ஆட்சி செய்வதற்கு வாய்ப்பை பெற்றுள்ளமையே இந்த வாழ்த்திற்கான காரணமாகும்.

சீன நாட்டு ஜனாதிபதி ஜி ஜின் பின் இரண்டாவது தடவையாகவும் ஆட்சிக்கு வந்திருக்கும் நிலையில் இரு நாட்டிற்கும் இடையிலான நட்பு மேலும் வளர்ச்சியடையும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்ப்பதாக பிரதமர் காரியாலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

## பாராளுமன்றம் மீது குண்டு வீச்சு! விமலின் கட்சிக்குள் பெரும் குழப்பம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு குறித்து தமது கட்சித் தலைவர் விமல்வீரவன்சவின்உரையை, தேசிய அமைப்பாளர் பியசிறி விஜேநாயக்க விமர்சித்தது தவறு என்று தேசிய சுதந்திர முன்னணியின் உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.



ஊடகவியலாளர்களை நேற்று சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பியசிறியின் செயலுக்காக அவருக்கு எதிரான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுமா? என்று கேட்கப்பட்டதற்கு, கட்சி ஆலோசனையின் பின்னரே அது குறித்துத் தெரிய வரும் என்று ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்று மீது குண்டு வீசப்பட வேண்டும்' என்ற விமலின் கருத்து தனிப்பட்டதே என்றும், இதற்காக அவர் பொதுமக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் பியசிறி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீர்கொழும்பில் சட்டவிரோத படகு தயாரிக்கும் வர்த்தகம்

## ஒருவர் சிக்கினார்

(கொழும்பு)

நீர்கொழும்பு வர்த்தகர் ஒருவரினால் நடத்திச் செல்லப்பட்ட சட்டவிரோத படகு தயாரிப்பு வர்த்தகம் ஒன்று தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

கடற்றொழில் அமைச்சின் அனுமதியின்றியும் கடற்றொழில் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பதிவிலக்கத்திற்கு பதிலாக வேறு மீன்பிடி படகுகளுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்களை போலியான முறையில் பயன்படுத்தியும் இந்த சட்டவிரோத படகு தயாரிக்கும் வர்த்தகத்தை நடத்திச் சென்றுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபோன்று 32 படகுகள் நீர்கொழும்பு பிரதேசத்தில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரான வர்த்தகர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை யடுத்து அடுத்த மாதம் 07 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் குறித்த 32 படகுகளையும் பறிமுதல் செய்வதற்கான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மீன்பிடி படகுகள் தயாரிக்கப்படுவதாக இருந்தால் அதற்காக கடற்றொழில் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதுடன் அந்த நிறுவனம் கடற்றொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கிலுள்ள நான்கு இடங்களை மணலாறு பிரதேச சபையுடன் இணைக்குக

## மீள் எல்லை நிர்ணயக்குழு தலைவருக்குக் கடிதம்

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டுள்ள சிங்கள மக்கள் குடியிருக்கும் நான்கு வட்டாரங்களையும் மணலாறு (வெலிஓயா) பிரதேச சபையுடன் இணைக்குமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூராட்சி மன்றங்களின் மீள் எல்லை நிர்ணயக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கலாபோகஸ்வேவவை அண்டிய குடியேற்றக் கிராமங்களான 17 கிராமங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் நேரடியாக நிலைத் தொடர்பு அற்றவையாகும். இந்தக்கிராமங்களை உள்ளடக்கியதான 04 வட்டாரங்கள் கடந்த உள்ளூராட்சி தேர்தலின்போது வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டிருந்தன.

எனினும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது பிரதேச செயலக சேவைகளை மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்திலிருந்தே பெற்று வந்தனர். 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேருநர் இடாப்பில் இவர்களின் பெயர்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாரம்பரிய தமிழ் கிராமசேவையாளர் பிரிவுகளான வெடிவைத்தகல்லு மற்றும் பட்டிக்குடியிருப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த மக்கள் தமது சுகாதார சேவைகளை முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலும், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கான சேவைகளை வவுனியா தெற்கு சிங்கள பிரிவிலுள்ள பணிமனையிலும், மின்சார, தொலைபேசி சேவைகளை அநுராதபுர மாவட்டத்திலிருந்தும் பெற்று வருகின்றார்கள். வவுனியா வடக்கு பிரதேச செயலக, பிரதேச சபை சேவைகளை பெறும் பொருட்டு 75 கி.மீ காட்டுவழியினால் இவர்கள் பயணிக்கின்றார்கள்.

இந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு வவுனியா வடக்கு பிரதேச சபையின் 47ஆவது அமர்வில் மேற்படி வட்டாரங்களை சேர்ந்த 04 உறுப்பினர்கள் தாங்கள் வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆளுகையிலிருந்து விடுபடக் கோரி முன்வைக்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த மாகாண சபை அமர்வில் இதுதொடர்பாக என்னால் முன்வைக்கப்பட்ட விசேட பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டு மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆகவே தற்போது மணலாறு (வெலிஓயா) பிரதேசத்திற்கு தனியான பிரதேச செயலகம் நிறுவப்பட்டுள்ள நிலையில் மேற்படி நான்கு வட்டாரங்களைச் சேர்ந்த 17 கிராமத்தைச் சேர்ந்த மக்களையும் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு மணலாறு பிரதேச சபையுடன் இணைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அல்லது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பொதுமகனுக்கு ஒரு ராணுவ சிப்பாய்

## பேர்ள் அறிக்கையை ஆதாரம் காட்டினார் ரவிகரன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு பொதுமகனுக்கு ஒரு இராணுவ சிப்பாய் என்ற நிலையில் அங்கு எவ்வாறு குற்றச்செயல்கள் நடைபெறுகின்றன என அமெரிக்காவை தளமாக கொண்டியங்கும் பேர்ள் என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வை சுட்டிக்காட்டி வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன் வடக்கு மாகாண சபையின் அமர்வில் கேள்வியெழுப்பியுள்ளார். வடக்கு மாகாண சபையின் 108 ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கில் இராணுவத்தின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், இராணுவமயமாக்கல் போருக்கு பின்னரான காலங்களில் தீவிரமடைந்து கொண்டுள்ள நிலையில் இராணுவம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொண்டு வருகின்ற இராணுவ மயமாக்கல் மற்றும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பில் அமெரிக்காவை தளமாக கொண்டியங்கும் பேர்ள் என்ற நிறுவனமும் அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையமும் இணைந்து புள்ளிவிபரங்களுடன் கூடிய ஆய்வொன்றை வெளியிட்டுள்ளன.

இந்த ஆய்வின் படி முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்த இடத்தில் எந்த இராணுவ முகாம் உள்ளது என்பதனை சாதாரண பொதுமகன்கூட அறிந்து கொள்ளும் வகையில் இந்த ஆய்வில் வரைபடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அந்த வரைபடத்தின் மூலம் முல்லைத்தீவில் முப்படையினருடைய கட்டுப்பாட்டில் உள்ள இராணுவ முகாம்கள், இராணுவ படைத்தளங்கள் எந்த இடத்தில் உள்ளது என்பதை மிகச் சரியாக பார்க்க முடியும். இலங்கையின் ஒட்டுமொத்த படை பிரிவில் இரண்டு இலட்சத்து 43 ஆயிரம் படையினர் உள்ள நிலையில் இவற்றில் முல்லைத்தீவில் மட்டும் தற்போது 60 ஆயிரம் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இது இலங்கையின் ஒட்டுமொத்த இராணுவத்தினரின் எண்ணிக்கையில் 25 சதவீதமாகும்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2014 ஆம் ஆண்டு தரவுகளின் படி ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 332 மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்து வருகின்றனர். இந்த எண்ணிக்கையுடன் இராணுவத்தின் எண்ணிக்கையை ஒப்பீடு செய்யும் போது ஒரு இராணுவத்தினர் இரண்டு பொது மக்களுக்கு என்ற விகிதத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலை கொண்டுள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகின்றது. இது தவிர அதிகரித்த இராணுவ பிரசன்னம், காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்கல், காணி அபகரிப்பும் இடப்பெயர்வும், முல்லைத்தீவில் வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பாதிப்பு, சிவில் நடவடிக்கைகள் மீதான கண்காணிப்பு, எனப்பல விடயங்களை பற்றி பேசியுள்ளது. இந்த நிலையில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் திருட்டு சம்பவங்கள் தினம் அதிகரித்து காணப்படுகின்றது. ஆகவே இது தொடர்பில் இராணுவமும் பொறுப்புகூற வேண்டியுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண சபையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1231

Search for people, places and things | Nagendram Home

கவிதா




யதுனா




தனுசன்




தானியா




கஜனான்




சஜின்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கல் அகற்றப்பட்டதால் வாழைச்சேனையில் இரு இனங்களுக்கிடையில் முறுகல் நிலை

## கலகம் அடக்கும் பொலிஸார் குவிப்பு










(மட்டக்களப்பு)

இரு இனங்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் வாக்குவாதத்தால் வாழைச்சேனையில் பெரும் பதற்றம் நிலவி வருவதாக தெரிய வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் அங்குள்ள பஸ்தரிப்பிடத்திற்கு அடிக்கல் நாட்டியுள்ள நிலையில் குறித்த அடிக்கல்லை இனந்தெரியாத நபர்கள் அகற்றியுள்ளதாகவும் இதனால் குறித்த பகுதியில் இரு சமூகங்களுக்கிடையில்வாக்குவாதம் முற்றியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் குறித்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன் கலகமடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்ட சகோதரர்களுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

சகோதரர்கள் இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற மனிதப்படுகொலைச் சம்பவம் ஒன்றில் அவர்கள் இருவருக்கும் தொடர்பு உள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்தத் தீர்ப்பு வழங் கப்பட்டுள்ளது.

2001ஆம்ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி கொட்டாஞ்சேனை பகுதியில் கூரிய ஆயுதத்தால் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் பிரதிவாதிகளான சகோதரர்கள் இருவருக்கும் கொழும் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கின் விசாரணைகள் நேற்று கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

45 மற்றும் 47 வயதுடைய ஒரே குடும்பத்தைச்சார்ந்த சகோதரர்களுக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## எதிரியைப் பழிவாங்க அதிக விசம் கொண்ட பாம்பு



(கொழும்பு)

எதிரி ஒருவரை பழி வாங்குவதற்காக அதிக விசம் கொண்ட பாம்பினை, போத்தலுக்குள் அடைத்து, அவரின் வீட்டிற்கு கொண்டு வந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குருநாகல் - அலவ்வ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் இரு நபர்களுக்கிடையில் நீண்ட காலமாக தனிப்பட்ட பிரச்சினை காணப்பட்ட நிலையில், பல தடவைகள் இருவருக்குமான பிரச்சினைகள் தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், சிறிது காலம் அமைதியாக செயற்பட்ட எதிரிகளில் ஒருவர் விசப்பாம்பு ஒன்றினை பிடித்து போத்தலுக்குள் அடைத்து தனது எதிரியின் வீட்டில் இரகசியமாக வைத்து விட்டு வர, சென்றுள்ளார்.

இதன்போது எதிரி வருவதை அறிந்து கொண்ட நபர், கையில் போத்தல் ஒன்றுடன் அவர் வருவதையும் அவதானித்துள்ளார்.

குறித்த நபர் போத்தலை வீட்டில் வைத்து விட்டு சென்று சிறிது நேரத்தின் பின்னர் போத்தலை பார்த்த மற்றைய நபர், போத்தலுக்குள் பாம்பு இருப்பதனை அறிந்து கொண்டுள்ளார்.

போத்தலை நன்றாக மூடியதன் பின்னர் பாம்பு அடைக்கப்பட்ட போத்தலுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டினை ஏற்றுக்கொண்ட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதோடு பாம்பினை தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ஒப்படைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

## இலங்கைக்கான இத்தாலியத் தூதுவருடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் போலோ அண்ட்ரியா பார்டோரெல்லி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த சிநேகபூர்வ கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)








தேசிய வாசிப்பு மாத நிகழ்வினையொட்டி யாழ். பொது நூலகம் நடத்தும் புத்தகக் கண்காட்சி இன்று [illegible] நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்காட்சியில் பல மாணவ, மாணவிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படையின் 22 வது தளபதியாக பொறுப்பேற்றார் வைஸ் அட்மிரல் ரணசிங்க





(கொழும்பு)

இலங்கையின் 22 ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் நடந்த நிகழ்வில் கடற்படைத் தளபதியாக பொறுப்பேற்றார்.

முன்னதாக ஓய்வுபெற்றுச் செல்லும் கடற்படைத் தளபதி அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா கடற்படைத் தளபதிக்குரிய அதிகாரபூர்வ வாளை வைஸ் அட்மிரல் ரணசிங்கவிடம் கையளித்தார்.

இதன் பின்னர் கடற்படைத் தளபதியாகப் பதவியேற்கும் ஆவணங்களில் கையெழுத்திட்டு வைஸ் அட்மிரல் ரணசிங்க பதவியைப் பொறுப்பேற்றார்.

இதையடுத்து அட்மிரல் சின்னையாவுக்கு கடற்படை மரபுகளுக்கமைய அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய வழியனுப்பு நிகழ்வு இடம்பெற்றது. (இ-7)

# வைத்தியர்களின் தவறினால் குழந்தையின் பரிதாப நிலை

(கொழும்பு)

வைத்தியரின் தவறான நடவடிக்கை காரணமாக ஒன்றரை வயதுக் குழந்தை பாதிக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றரை வயதுடைய குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைக்கு பின்னர் அந்தக் குழந்தை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கலேவெல - அழுத்வெவ பகுதியை சேர்ந்த குழந்தையே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழந்தைக்கு கண் பார்வை குறைவடைந்துள்ளதுடன், வாய் பேச முடியாமல், நடக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேல் உதட்டில் ஏற்பட சிதைவை சரி செய்வதற்காக அந்த குழந்தைக்கு சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு 7 மாதம் 22ஆம் திகதி பிறந்த குழந்தைக்கு பிறக்கும் போதே உதடு சிதைவடைந்து காணப்பட்டுள்ளது.

வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய குழந்தைக்கு 6 மாதம் நிறைவடைந்தவுடன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சையின் பின்னர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட குழந்தைக்கு போதுமான அளவு ஒட்சிசன் வழங்கப்படாமையினாலே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக குழந்தையின் தந்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு குழந்தையின் தந்தை கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# 10 ஆயிரம் வீட்டுத்திட்டம் தொடர்பில் இந்தியாவுடன் விரைவில் ஒப்பந்தம்

## அமைச்சர் திகா தகவல்

(டில்லி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையின்போது அவர் அறிவித்த மலையக மக்களுக்கான பத்தாயிரம் வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கும் தமது அமைச்சுக்கும் இடையில் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாக மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துணைத் தூதுவர் தலைமையிலான குழுவினருக்கும் அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அமைச்சில் இடம்பெற்றது. அமைச்சர் பழனி திகாம்பரத்துடன் அமைச்சின் செயலாளர் ரஞ்சனி நடராஜபிள்ளை, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.உதயகுமார், இந்தியத் தூதுக்குழு சார்பாக துணை உயர்ஸ்தானிகர் அரிந்தாம் பக்ஷி, இணைச்செயலாளர் அமித்குமார், முதன்மைச் செயலாளர் திருமதி சுஜா மேனன், தூதரக அதிகாரி தாஸ் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கடந்த பல வருடங்களாக கிடப்பில் போடப்பட்டிருந்த இந்திய வீடமைப்புத்திட்டமானது நல்லாட்சி அரசில் அமைச்சர் திகாம்பரம் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை பொறுப்பேற்றவுடன் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதுடன் தற்போது முதற்கட்டமாக 1134 வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இரண்டாவது கட்டமாக 2866 வீடுகளுக்கான கட்டுமானப்பணிகள் எதிர்வரும் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது நோர்வூட் மைதானத்தில் மலையக மக்களைச் சந்தித்து அவர் அறிவித்த 10,000 வீடுகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடலாகவே நேற்று முன்தினம் இச் சந்திப்பு இடம்பெற்றது.



கிடப்பில் போடப்பட்டிருந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக அமைச்சருக்கு நன்றி தெரிவித்த இந்திய தூதுக்குழு எதிர்வரும் மூன்றாண்டு காலப் பகுதிக்குள் இந்திய வீடமைப்புத்திட்டத்தின் எஞ்சிய 10,000 வீடுகளையும் அமைக்கும் திட்டத்திற்கு பணிகளைத் தயார் செய்யுமாறும் அது தொடர்பான மேலதிக உதவிகளை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

ஏற்கனவே 10,000 வீடுகளை அமைப்பதற்காக திட்டமிடல் திணைக்களத்தினதும் முகாமைத்துவ குழுவினதும் அனுமதி கிடைத்துள்ள அதேவேளை இதற்கான அமைச்சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதனைத் தொடர்ந்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் அமைச்சு புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட்டு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் திகாம்பரம் தெரிவித்துள்ளார். (இ-7)

# ரோஹிஞ்யாக்களுக்கு இலங்கை அரசு உதவி

(கொழும்பு)

மியன்மாரின் ரோஹிஞ்யா முஸ்லிம் அகதிகளுக்கு இலங்கை அரசாங்கம் உதவிகளை வழங்க உள்ளது. ரோஹிஞ்யா அகதிகளுக்காக 50000 அமெரிக்க டொலர்களை வழங்க உள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்திடம் இந்த உதவி வழங்கப்பட உள்ளது. மனிதாபிமான அடிப்படையில் இந்த உதவி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# திவிநெகும மோசடி; பசிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

திவிநெகும மோசடியில் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்குரிய 36.5 மில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்தமை தொடர்பிலே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.



இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)


# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

## வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும்? ஜனாதிபதி, பிரதமரிடம் நாமல் கேள்வி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

குறித்த கேள்வியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோரிடம் நாமல் ராஜபக்ஷ கேட்டுள்ளார்.



தனது டுவிட்டர் தளத்தில் அவர் இந்தக் கேள்வியை முன்வைத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் வாக்குறுதியளிக்கப்பட்ட போதும் அது தற்போது வரை இடம்பெறவில்லை.

எப்போது அதுநடக்கும்என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்குமா? பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரவில்லை

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை என தெரிவித்த பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தம்மிக்க ரணதுங்க தமது நிறுவனத்துக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 11 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

பெற்றோல், டீசல் விலை அதிகரிப்பானது நாட்டின் ஏனைய பொருளாதார நிலைமைகளை கருத்திற்கொண்டே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போதுள்ள நிலைமையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது நட்டத்திலேயே இயங்குகின்றது. இலாபமீட்ட முடியாத நெருக்கடியான நிலைமைக்கு முகங்கொடுக்கின்றபோதும் பகிர்ந்தளிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக விலைகளை அதிகரிக்கும் கோரிக்கையை முன்வைக்கவில்லை.


மேலும் எதிர்காலத்தில் குறித்த திணைக்களங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானமொன்றுக்கு வரவேண்டியுள்ளது. எவ்வாறாயினும் தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்கும் எண்ணமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஒரு பைசாவின் அருமை!



ஓர் ஊரில் சபாபதி என்ற தனவந்தர் வாழ்ந்து வந்தார். பல ஆண்டுகளாகக் குழந்தை இல்லாதிருந்த அவர் பல கோயில்களுக்கும் சென்று வேண்டிக் கொண்டதால் ஒரு மகன் பிறந்தான். தவமிருந்து பெற்ற பிள்ளை என்று சபாபதி மிகவும் செல்லமாக வளர்த்தார். அதனால் அந்தச் சிறுவன் மிகவும் கர்வமும் அடங்காப் பிடாரித் தனமும் கொண்டு வளர்ந்தான்.

ஒரு நாளைக்குப் பத்துத்தரமாவது "கதிர்வேலு கதிர்வேலு" என்று தன் மகனை அழைக்காமல் இருக்கமாட்டார் சபாபதி. இதுமட்டுமல்லாமல் அவன் பள்ளியில் செய்து விட்டு வரும் விஷமங்களை எல்லாம் கண்ணன் செய்த திருவிளையாடல் போல் ரசித்தார். அவன் செய்யும் தவறுகளையும் சுட்டிக் காட்டித் திருத்தாது மன்னித்து மறந்து வந்தார். அதனால் கதிர்வேலு மிகவும் பொல்லாத் தனத்துடன் வளர்ந்தான்.

சில வருடங்கள் கழிந்தன. கதிர்வேலுவின் கெட்ட செயல்களும் வளர்ந்தன. நிறைந்த செல்வம் இருந்ததால் அவன் செய்யும் தீய செயல்களையெல்லாம் செல்வ பலத்தால் மறைத்து வந்தான்.

சாகும் தறுவாயில் சபாபதி மகனிடம் இனியேனும் யார் வம்புக்கும் போகாமல் தான் சேர்த்து வைத்திருக்கும் நிறைந்த செல்வத்துடன் சுகமாக இரு என்று அறிவுரை சொன்னார்.

ஆனால் சபாபதி இறந்த பிறகும் கதிர்வேலு தன் தீய குணங்களை விடவில்லை. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் அல்லவா?

இவன் அடிக்கடி தவறு செய்து விட்டு நீதிமன்றம் வருவதும் செல்வ பலத்தால் தண்டனை பெறாமல் தப்புவதும் வழக்கமான ஒன்றாகி விட்டது. அவ்வூர் நீதிமன்ற நீதிபதி இவனுக்கு எப்படியும் தண்டனை வழங்கி அதை இவன் அனுபவிக்கும்படி செய்யவேண்டும் என நினைத்தார். ஆனால் பொய்ச் சாட்சிகளை வைத்து குற்றங்களிலிருந்து மீண்டு விடுவான்.

ஒரு முறை அவ்வூரில் இருந்த விவசாயிக்குக் கடன் கொடுத்ததாகப் பொய் வழக்குப் போட்டான். அவன் நிலத்தை அபகரிக்கத் திட்டம் போட்டான். வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது.

நீதிபதி வழக்கை விசாரித்தார். இதை நேரில் பார்த்ததாகச் சொன்ன விவசாயியை அழைத்து வந்து விசாரித்தார். அவனும் கதிர்வேலுவிடம் பணம் வாங்கிக் கொண்டு பொய்ச்சாட்சி சொல்வதற்காக நீதிபதி முன் நின்றான்.

அப்போது கதிர்வேலுவின் பணியாள் கட்டுக் கட்டாகப் பணத்தைக் கதிர்வேலுவிடம் கொடுப்பதை நீதிபதி கவனித்தார். இவன் அபராதப் பணத்துடன் வந்துள்ளான். எனவே இவன் குற்றம் செய்தவன் என்பது தெரிகிறது. இம்முறை இவனைத் தப்பவிடக்கூடாது என முடிவு செய்தார்.

கதிர்வேலு அழைத்து வந்திருந்த பொய்ச்சாட்சியை நீதிபதி விசாரணை செய்தார். அந்த விவசாயி பல நாட்களாக மனதுக்குள் கதிர்வேலுவுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்று எண்ணியிருந்தான். அதனால் நீதிபதியிடம் உண்மையைக் கூறியதோடு தனக்கு அவன் இலஞ்சம் கொடுத்துக் கூட்டிவந்ததையும் கூறினான்.

"பொய்ச்சாட்சி சொல்ல பணம் வாங்கிக் கொண்டாயா?"

"ஐயா, மன்னிக்கணுங்க. நான் பணம் வாங்கினது நிஜம். ஆனா, நான் வரலையின்னா வேற ஆள் வந்து இவனுக்கு சாதகமா சாட்சி சொல்லிடுவானே. அதனால நானே வந்திட்டனுங்க. இதோ இருக்குதுங்க அவரு கொடுத்தபணம்" என்று ரூபாயை நீதிபதியிடம் கொடுத்தான். நீதிபதி கதிர்வேலுவிடம் "இப்போது உன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா இல்லையா?" என்று கேட்க கையும் களவுமாகப் பிடிபட்டதால் கதிர்வேலு அமைதியாக நின்றான்.

"நீ செய்த குற்றத்திற்கும் இலஞ்சம் கொடுத்து பொய்ச்சாட்சியை அழைத்து வந்ததற்கும் உனக்கு அப்ராதம் விதிக்கப் போகிறேன்" என்றார்.

தொடரும்...



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2017 28

- ❖ 312- மில்வியன் பாலத்தில் இடம்பெற்ற போரில் முதலாம் கான்ஸ்டன்டைன் உரோமைப் பேரரசர் மாக்சென்டியசைத் தோற்கடித்து மேற்குலகின் தனித்த உரோமைப் பேரரசரானார்.
- ❖ 1420-பீஜிங் அதிகாரபூர்வமாக மிங் அரசின் தலைநகரானது.
- ❖ 1492-கொலம்பஸ் புதிய உலகத்திற்கான தனது முதலாவது பயணத்தின்போது கியூபாவைக் கண்டுபிடித்தார்.
- ❖ 1775-அமெரிக்கப் புரட்சிப் போர்: பாஸ்டனில் இருந்து மக்கள் வெளியேறுவதைத் தடுக்கும் பிரித்தானியச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
- ❖ 1834-மேற்கு அவுஸ்திரேலியாவின் பிஞ்சாரா என்ற இடத்தில் பிரித்தானியக் குடியேறிகளினால் 30 நூங்கார் பழங்குடியினர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1886-நியூயோர்க் துறைமுகத்தில் விடுதலைச் சிலையை அரசுத்தலைவர் குரோவர் கிளீவ்லாண்ட் திறந்து வைத்தார்.
- ❖ 1918- முதல் உலகப் போர்: ஆஸ்திரியா-ஹங்கேரியில் இருந்து செக்கோசிலவாக்கியா விடுதலையை அறிவித்தது. 300 ஆண்டுகளுக்குப் பின்னர் செக்கோசிலவாக்கியா விடுதலை அடைந்தது.
- ❖ 1918- புதிய போலந்து அரசு மேற்கு கலீசியாவில் உருவானதை அடுத்து. போலந்து-உக்ரைனியப் போர் ஆரம்பமானது.
- ❖ 1922-பெனிட்டோ முசோலினி தலைமையில் இத்தாலிய பாசிஸ்டுகள் இத்தாலிய அரசைக் கைப்பற்றினர்.
- ❖ 1942-கனடா ஊடான அலாஸ்கா வரையான அலாஸ்கா நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது.
- ❖ 1956-எல்விஸ் பிரெஸ்லி தேசியத் தொலைக்காட்சியில் போலியோ தடுப்பூசியை ஏற்றிக் கொண்டார்.
- ❖ 1958-23ஆம் யோவான் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்..
- ❖ 1995-அசர்பைஜான் தலைநகர் பக்கூவில் சுரங்க தொடருந்துப் பாதையில் ஏற்பட்ட தீவிபத்தில் 229 பேர் கொல்லப்பட்டனர். 265 பேர் காயமடைந்தனர்.
- ❖ 2006-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே 8 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் ஜெனீவாவில் மீண்டும் ஆரம்பமாயின.

பிறப்புகள்

- ❖ 1892-மணிலால் காந்தி, மகாத்மா காந்தியின் 2ஆவது மகன், சமூக செயற்பாட்டாளர் (இ. 1956)
- ❖ 1914- யோனாசு சால்க், அமெரிக்க உயிரியலாளர், மருத்துவர் (இ. 1995)
- ❖ 1955-பில்கேட்ஸ், மைக்ரோசொப்ட் நிறுவுநர்
- ❖ 1955-இந்திரா நூயி, இந்திய-அமெரிக்கத் தொழிலதிபர்
- ❖ 1958-அசோக் சவான், மகாராஷ்டிராவின் 16ஆவது முதல்வர்
- ❖ 1967- ஜூலியா ராபர்ட்ஸ், அமெரிக்க நடிகை
- ❖ 1978- ஹரின் பெர்னாண்டோ, இலங்கை அரசியல்வாதி

இறப்புகள்

- ❖ 1627- ஜஹாங்கீர், முகலாயப் பேரரசர் (பி. 1569)
- ❖ 1704- ஜான் லாக், ஆங்கிலேய மெய்யியலாளர், மருத்துவர் (பி. 1632)
- ❖ 1900- மாக்ஸ் முல்லர், செருமானிய மொழியியலாளர் (பி. 1823)
- ❖ 1978- ருக்மணிதேவி, இலங்கை நடிகை, பாடகி (பி. 1923)
- ❖ 1982-இராபெர்ட் தெஸ்கோர்ட் அட்கின்சன், பிரித்தானிய வானியலாளர், இயற்பியலாளர் (பி. 1898)
- ❖ 1997-மைசூர் வீ. துரைசுவாமி ஐயங்கார், கர்நாடக வீணை இசைக்கலைஞர் (பி: 1920)
- ❖ 2013- ராஜேந்திர யாதவ், இந்திய எழுத்தாளர் (பி. 1929)
- ❖ 2014-மைக்கேல் சாட்டா, சாம்பியாவின் 5ஆவது அரசுத்தலைவர் (பி. 1937)

சிறப்பு நாள்

- ❖ தேசிய நாள் (செக் குடியரசு, சிலவாக்கியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 100 | 120 | 160 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 95 | 110 | 120 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 350 | 500 | 320 | 400 | 600 | 400 | 500 |
| தக்காளி | 180 | 200 | 140 | 200 | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 80 | 60 | 40 | 60 |
| கோவா | 140 | 160 | 80 | 140 | 160 | 120 | 100 |
| கரட் | 120 | 200 | 80 | 200 | 200 | 90 | 200 |
| பூசணி | 80 | 60 | 40 | 40 | 60 | 50 | 60 |
| புடோல் | 100 | 120 | 60 | 80 | 100 | 90 | 80 |
| வாழைக்காய் | 80 | 120 | 70 | 100 | 120 | 90 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 200 | 250 | 320 | 280 | 240 |
| பெரிய வெங்காயம் | 120 | 200 | 140 | 160 | 200 | 160 | 140 |
| பாகற்காய் | 400 | 600 | 300 | 400 | 300 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 80 | 80 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 200 | 70 | 100 | 80 | 70 | 80 |
| பயற்றங்காய் | 140 | 200 | 100 | 300 | 160 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 250 | 170 | 240 | 240 | 200 | 200 |
| பீற்றூட் | 80 | 120 | 60 | 100 | 120 | 90 | 100 |
| கறிமிளகாய் | 300 | 250 | 200 | 280 | 400 | 450 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 200 | 400 | 200 | 400 | 500 |
| போஞ்சி | 200 | 280 | 120 | 160 | 200 | 180 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | — | 120 | 80 | 120 |
| கீரை -1பிடி | 30 | 20 | 30 | 60 | 30 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 240 | 300 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 100 | 80 | 75 | 60-80 | 90 | 90 |
| இராசவள்ளி | — | 500 | 250 | — | — | 400 | — |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | — | 240 | 320 | 200 |
| முள்ளங்கி | 70 | 100 | 30 | 80 | 120 | 90 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 08 | 20 | 20 | 30 | 20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்துக்கு உள்ளாக்குவதிலேயே கழிக் கின்றனர். - லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அந்தோ! கொடுமை

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் இளம் தாயும் மூன்று குழந்தைகளும் உயிர் நீத்த செய்தி அறிந்து நெக்குருகாதார் எவரும் இருக்க முடியாது. அந்தளவுக்கு மிகப்பெரும் துயரம் நடந்து முடிந்துள்ளது.

இளம் தாய், பச்சிளம் குழந்தைகள் மூவர். கடவுளே! வாழவேண்டிய அவர்களுக்கு எங்கள் மண்கொடுத்த பரிசு இதுதானா என்று நினைக்கும்போது, தளர்ந்தவேளை தாங்கிப் பிடிக்கும் அமைப்புக்கள்; ஆறுதல்படுத்தும் மனிதங்கள்; தேற்றிக் கொள்ளும் மனத்திடம் எதுவும் இல்லை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

கடனைக் கொடுத்து ஏமாந்த நிலையில் கணவன் தற்கொலை செய்து கொள்ள இளம் தாயும் மூன்று பிள்ளைகளும் அதேவழியில் மரணிப்பதென்பது தாங்கமுடியாத துன்பத்துக் குரியது.

தந்தை உயிரை மாய்த்தாலும் ஒரு தாயாக நின்று உன் பிள்ளைகளை வளர்த்து சாதனை படைத்துக் காட்டு என்று உற்சாகம் கொடுப்பதற்கும் என் பிள்ளைகளை வளர்த்தெடுத்து சாதனை செய்வேன் என்று உறுதி செய்யும் மனத்திடம் அந்தத் தாயிடமும் இல்லாமல் போனமைக்கு எங்கள் சமூகத்தின் பின்னணிகளும் காரணம் என்பதை நிராகரித்துவிட முடியாது.

யுத்தத்தின் பிடியில் இருந்து மீண்டுவிட்டோம் என்றால் கடன் தொல்லை எங்களைத் துரத்துகிறது.

போர் விமானங்களும் துப்பாக்கிச் சூடுகளும் எங்கள் உயிர்களை எடுத்தது ஓய்ந்து போக, அந்த இடத்தை கடன் பிடித்துக் கொண்டு விட்டது. அதன் சாட்சிகளாக தற்கொலைகள் நடந்த வண்ணமுள்ளன.

அதன் உச்சக்கட்டமாக ஒரு தாயும் மூன்று குழந்தைகளும் நேற்றைய தினம் உயிர்நீத்தனர். இதைக் கேட்கும்போது எல்லாம் வெறுத்து மனித வாழ்வு தேவைதானா என்ற மனநிலையை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களிடமும் ஏற்படுத்துகிறது.

என்ன செய்வது! எத்தனையோ கஷ்டங்கள், வாழ்வுக்கான போராட்டங்கள் இதன்மத்தியில் கடன் சுமைகளும் வட்டிக் கொடுமைகளும் ஏமாற்றுப் பேர்வழிகளும் மனிதநேயத்தை விற்றுப் பிழைக்க; எங்கள் இனம்வேரறுந்து போகிறது.

ஓ! தமிழ் மக்களின் வாக்குகளில் பதவி பெற்ற அரசியல்வாதிகளே! உங்கள் பிள்ளைகள் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள் உங்களுக்கோ எந்தக் கஷ்டமும் தெரியாது.

ஆனால் தமிழ் மக்கள் உழைப்பறுந்து வாழ வழியின்றி வேறு தொழிலின்றி இந்த மனித வாழ்வு வேண்டாமென்று நஞ்சருந்தி, கழுத்தில் கயிறு மாட்டி துடிதுடித்து போகின்றனரே! நீங்கள் இதுபற்றி ஏதும் கண்டுகொண்டீர்களா?

தொழில் நிறுவனங்களை ஆரம்பித்து வேலைவாய்ப்பு வழங்கினீர்களா? சுயதொழிலில் ஈடுபட வாய்ப்புக் கொடுத்தீர்களா? செய்கின்ற உற்பத்தி பொருட்களையேனும் சந்தைப் படுத்த சந்தர்ப்பம் தந்தீர்களா?

கடன்சுமையால் குடும்பத் தலைவன் தற்கொலை எனும்போது அந்த வீட்டுக்குச் சென்று ஆறுதல் கூறி குழந்தைகளை வளர்த்தெடுங்கள். நாங்கள் உங்களுக்கு அரச பணி தருகிறோம். சீவனோபாயத்துக்கு உதவுகிறோம். பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக வெளிநாட்டில் இருக்கும் எங்கள் புலம்பெயர் உறவுகளின் உதவியைப் பெற்றுத் தருகிறோம். இப்படி ஏதேனும் செய்தீர்களா?

கடவுளே! எதுவுமில்லை எனும்போது இப்படியொரு அவல முடிவு. இது கண்டு யாரும் நிம்மதியாக இருக்க முடியாது என்பதால்,

இப்பெரும் அவலங்கள் இனியேனும் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

## காதலித்து ஏமாற்றிய இளைஞனுக்கு 10 வருட கடூழிய சிறை

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(குருமன்காடு)

16 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளையை காதலித்து வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக முல்லைத்தீவு இளைஞனொருவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று 10 வருட கடூழிய சிறைத் தண் டனை விதித்து தீர்ப்பளித்தது.

முல்லைத்தீவு மாங்குளம் ஒலுமடு பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய நாகராசா ஜெகதீஸ்வரன் என்ற இளைஞன் 2011ஆம் ஆண்டு பெண் பிள்ளை ஒருவரை காதலிப்பதாக கூறி அவரை காதலித்து ஏமாற்றி வன்புணர்வுக்குட்படுத்தி ஒரு குழந்தைக்கு தாயாக்கியுள்ளார்.

இதனையடுத்து குறித்த இளைஞன் தன்னை திருமணம் முடிப்பார் என காத்திருந்த பெண் அவர் வேறு திருமணம் முடித்து விட்டார் என்பதனை அறிந்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டினையடுத்து குறித்த நபரை கைது செய்த முல்லைத்தீவு பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று கடந்த 24.08.2017ஆம் திகதியன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பகிர்வு பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று சாட்சியங்கள் மன்றினால் பரிசீலிக்கப்பட்டு நேற்றைய தினம் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் குறித்த இளைஞன் 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளையை காதலிப்பதாக தெரிவித்து வன்புணர்வுக்குட்படுத்தியதற்கு 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன் பிறந்த குழந் தைக்கு மூன்று இலட்சம் ரூபாய் நஷ்டஈடு செலுத்துமாறும் அதை செலுத்த தவறின் 2 வருட கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் தண்டப் பணமாக பத்தாயிரம் ரூபாயை செலுத்துமாறும் அதை செலுத்த தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண் டனையும் அனுபவிக்க நேரிடும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் அரச தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கினை நெறிப்படுத்தியிருந்தார். (மு-250)

## ரூ. 25,000 அபராதம் வர்த்தமானியில்

வீதிப் போக்குவரத்து சம்பந்தமாக அரசாங்கத்தின் புதிய சட்ட திட்டங்கள் உள்ளடங்கிய மூன்று வர்த்தமானி அறிவித்தல்கள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என்று வீதிப் பாதுகாப்பு சம்பந்தமான தேசிய அதிகாரசபையின் தலைவர் சிசிர கோதாகொட கூறினார்.

அதன்படி போக்குவரத்து விதி மீறல்கள் சிலவற்றுக்காக் 25,000 ரூபாய் தண்டம் அறவிடுவது சம்பந்தமான திருத்தங்களும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட உள்ளது.

அத்துடன் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்துவது, வேகத்தை கட்டுப்படுத்தல், ஒரே தடவையில் ஏற்றிச் செல்ல முடியுமான பயணிகளின் அளவை வரையறுத்தல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம வெளியிடப்படும் என்று அவர் கூறினார். (மு-11)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




சாந்தி முகூர்த்தத்திற்குரிய திதி, கிழமை எது?

திதி: துதியை, பஞ்சதி, சப்தமி,தசமி, துவாதசி, திரயோதசி

கிழமை: திங்கள், புதன், வியாழன், வெள்ளி (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் பொககணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன், பூதர்மடம், கோப்பாய் சந்தி, இருபாலை, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ் நிலையம், பாற்பண்ணை திருநெல்வேலி, GPS றோட், திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, இராமலிங்கம் சந்தியிலிருந்து முடமாவடி, கிளிகடை வரை, பூங்கனிச்சோலை, பொற்பதி, கோண்டாவில் வோட்டா வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கடவையிலிருந்து தட்டார்தெரு சந்தி வரை, கே.கே.எஸ.வீதி நாச்சிமார் கோவிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம சந்தியிலிருந்து கே.கே.எஸ்.வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, கம்பஸ் லேன், தொழில் நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, ஹரிகரன் அச்சகம் பிறைவேற்லிமிரட், அண்ணா மலையான் சிறி இராக வேந்திரா என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிரட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி, கோப்பாய் இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, யாழ்.பல்கலைக்கழக தங்கு விடுதி, இராஜேஸ்வரி திருமண மண்டபம், கிளிநொச்சி பிரதேசத்தில் செல்வநகர், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், வவுனியா பிரதேசத்தில் மகாறம்பைக்குளம், தாஸநகர், பஸார்வீதி, மில்வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, இலுப்பையடி ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

126



அதன் நுழைவாயில் மரபுப்படி மஹாதுவாரம் என்று அழைக்கப்படுகிறது. ஐந்தடுக்குகோபுரம் ஒன்றைக் கிரீடமாகச் சூட்டிக் கொண்டுள்ளது. இக்கோபுரத்தின் அமைப்பு இராமேஸ்வரத்திலும் மதுரையிலும் ஸ்ரீரங்கத்திலும் உள்ள கோபுர அமைப்பைப் போன்றிருக்கிறது.

புனிதனைக் காண புனிதமாகப் போகவேண்டும் என்பதனால் இந்த நுழைவாயிலின் படியருகில் பளிங்கு நீர் சலசலவெனப் பெருகியபடி இருக்கிறது. அந்த நீரில் கால் பட்டவுடன் பாதாதி கேசம் வரை சிலிர்க்கிறது.(தொடரும்)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

மார்பக புற்றுநோயை ஆரம்பத்திலேயே இனம் காணுவதன் மூலம் மார்பக புற்றுநோயை பூரணமாக குணப்படுத்திக் கொள்ள முடியும். நோயுற்றவரின் வாழ்வின் எல்லையையும் அதிகரித்துக்கொள்ள முடியும். பாதிப்படைந்த மார்பகத்தை சத்திரசிகிச்சை மூலம் முன்பிருந்த நிலைக்கும் கொண்டு வரமுடியும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்ப்பாணம் மாநகர சபை

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உன் உடலில் ஏற்பட்டுள்ள கறையைப் பற்றிக் கவலைப்படாதே. இறைவன் என்னும் கருணைக்கடலில் மூழ்கி எழுந்தால், அது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

❖ உங்களிடம் அன்பு இருந்தால் ஆகாத செயல் என்று எதுவுமில்லை. நீங்கள் தன்னலத்தை துறந்து விட்டால் உங்களை எதிர்க்கும் சக்தி ஏதுமில்லை.

❖ நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள்: அதனால், புனிதமும் பூரணத்துவமும் உங்களிடம் நிறைந்திருக்கிறது.

❖ அன்பு ஒரு முதலீடு. எவ்வளவு போட்டாலும் அது மீண்டும் நம்மை வந்தடைந்துவிடும்.

❖ ஒட்டகம் முள் செடியைச் சாப்பிடும் போது வாயிலிருந்து ரத்தம் சொட்டும், இருந்தாலும் தின்பதை நிறுத்துவதில்லை. அதுபோல உலகத்தார் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளானாலும் உலகப்பற்றை அவர்கள் விடுவதில்லை.

❖ அன்பு, நேர்மை, சேவை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் நமக்கு தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கையின் அடிப்படை ஆதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட சுற்றுக்கு தெரிவாகியது நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி



மைலோகிண்ண உதை பந்தாட்ட போட்டியில் நேற்று முன் தினம் 26 ஆம் திகதி நடை பெற்ற யாழ்.லீக் B குழுவின் இறுதிப் போட்டியில் ஊரெழு.றோயல் அணியை 01-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு மாவட்ட சுற்றுக்கு தெரிவாகியது நாவாந்துறை சென். நீக்கிலஸ். நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி சார் பாக சுரேஸ் ஒரு கோலி னைப் போட்டார். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் பலாலி விண்மீன் வெற்றி



பருத்தித்துறை லீக் மைலோ கிண்ண உதை பந்தாட்ட தொடரில் அரையிறுதிப் போட்டியில் வெற்றியீட்டியது பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம். நேற்று முன்தினம் 26 ஆம் திகதி அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்ற போட்டியில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர் கொண்டது பலாலி விண்மீன். போட்டியில் இரு அணிகளும் சிறப்பாக ஆடியது போட்டி முடிவு வரை.

இரு அணிகளாலும் கோல் போடாமையால் நடுவர்களால் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட 4:2 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம். (க)

# பொன் விபுலானந்தன் கூடைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை ஏற்பாட்டில் மறைந்த பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்று வருகின்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் கழகங்களுக்கிடையில் இந்தச் சுற்றுப்போட்டியானது, லீக் முறையில் நடைபெற்று வருகின்றது. பெண்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற லீக் ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு,

**வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி வெற்றி**

வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை அணியும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி முதற் பாதியாட்டத்தில் 16:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது: இரண்டாவது பாதியாட்டத்தில் வேம்படி அணி 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில் வேம்படி அணி 31:25 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி வெற்றி**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் பருத்தித்துறை பெண்கள் மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. முதற் பாதியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் அணி 22:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்தை முழுமையாக தங்கள் பக்கம் வைத்திருந்த யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி 10:00 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது பாதியாட்டத்தை கைப்பற்றியது. முடிவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி 32:04 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

**கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி**

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில், முதற்பாதியாட்டத்தை கொக்குவில் இந்து அணி 32:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது பாதியாட்டத்தையும் சிறப்பாக ஆடிய அவ்வணி அந்தப் பாதியாட்டத்தையும் 38:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. முடிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 70:27 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

**வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி வெற்றி**

வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை அணியும் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. இதில், முதற் பாதியாட்டத்தை வேம்படி அணி 19:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது பாதியாட்டத்தை வேம்படி அணி 24:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில், வேம்படி அணி 43:04 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் போட்டியை வென்றது. (க-26)

# மைலோ கிண்ண உதைபந்து திக்கம் வி.கழகம் வெற்றி



பருத்தித்துறை லீக் மைலோ கிண்ண உதை பந்தாட்ட அரையிறுதி போட்டி திக்கம் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் 26 ஆம் திகதி இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது.

போட்டியில் சிறப்பாக செயற்பட்ட திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமானது எதிரணியினை 04:01 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றிபெற்றது. (க)

# துறையூர் ஐயனார், இருதயராசா சுப்பர் சுற்றுக்கு நுழைந்தது





மைலோ கிண்ண கால் பந்தாட்டத்தில் தீவக லீக்கிலிருந்து வேலணை துறையூர் ஐயனார் மற்றும் மெலிஞ்சிமுனை இருதயராசா ஆகிய அணிகள் சுப்பர் - 20 அணிகளுக்குள் நுழைந்துள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றன.

கிளிநொச்சி-யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தீவக லீக் அணிகளுக்கிடையிலான போட்டி, அம்பிகைநகர் அம்பிகை மற்றும் நாரந்தனை அண்ணா ஆகிய விளையாட்டுக் கழகங்களின் மைதானங்களில் நடைபெற்றன.

முதற்சுற்று ஆட்டங்களில் பருத்தியடைப்பு விளையாட்டுக்கழகம் 02:00 என்ற கோல்கள் கணக்கில் வயலூர் முருகன் அணியை யும் தம்பாட்டி காந்தி விளையாட்டுக்கழகம் 4:2 என்ற பனால்ட்டி கோல்கள் மூலம் ஊர்காவற்றுறை அண்ணா விளையாட்டுக் கழகத்தையும் சென்.ஜேம்ஸ் அணி 03:02 என்ற கோல்கள் கணக்கில் ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தையும் மெலிஞ்சிமுனை இருதயராசா விளையாட்டுக்கழகம் 02:00 என்ற கோல்கள் கணக்கில் காரைநகர் [illegible] அணியையும் வென்றன.

வேலணை துறையூர் ஐயனார், அருணோதயா, திருவள்ளுவர், சிறி மகேஸ்வரி, நாரந்தனை அண்ணா, பாரதி, சென்.சேவியர், நயினா அண்ணா, சென்.பிலீப்ஸ், ஈஸ்ரன், வெண்புரவி, புங்குடுதீவு நசரேத் ஆகிய அணிகள் நேரடியாக இரண்டாம் சுற்றிலிருந்து விளையாடுவதற்கு ஏற்கனவே தகுதி பெற்றன.

இரண்டாவது சுற்றில் திருவள்ளுவர் அணி பனால்ட்டி உதையில் 03:02 என்ற கோல்கள் கணக்கில் [illegible] அணியையும் தம்பாட்டி காந்தி அணி 02:00 என்ற கோல் கணக்கில் சிறி மகேஸ்வரி அணியையும்நாரந்தனை அண்ணா அணி 02:00 என்ற கோல் கணக்கில் பாரதி விளையாட்டுக்கழக அணியையும் நயினை அண்ணா அணி 02:00 என்ற கோல்கள் கணக்கில் சென்.சேவியர் அணியையும் சென்.ஜேம்ஸ் அணி 4:4 என்ற பனால்ட்டி உதையில் சென்.பிலீப்ஸ் அணியையும் மெலிஞ்சிமுனை இருதயராசா அணி 03:01 என்ற கோல்கள் கணக்கில் ஈஸ்ரன்அணியையும் வென்றன.

அருணோதயா அணி வருகை தராமையால் துறையூர் ஐயானர் அணியு[illegible] வெண்புரவி அணி வருகை தராமையால் புங்குடுதீவு நசரேத் அணியும் இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

மூன்றாம் சுற்றில் துறையூர் ஐயனார் அணி 04:00 என்ற கோல் கணக்கில் திருவள்ளுவர் அணியையும் தம்பாட்டி காந்தி அணி 02:00 என்ற கோல் கணக்கில் நாரந்தனை அண்ணா அணியையும் சென்.ஜேம்ஸ் அணி 4:3 என்ற பனால்ட்டி உதையின் மூலம் நயினை அண்ணா அணியையும் மெலிஞ்சிமுனை இருதயராசா அணி 02:00 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு நசரேத் அணியையும் வென்றன.

நான்காவது சுற்றில் துறையூர் ஐயனார் அணி 03:02 என்ற கோல்கள் கணக்கில் தம்பாட்டி காந்தி அணியையும் மெலிஞ்சிமுனை இருதயராசா அணி 02:00 என்ற கோல்கள் கணக்கில் சென்.ஜேம்ஸ் அணியையும் வென்றன.

இதன்மூலம் துறையூர் ஐயனார் மற்றும் மெலிஞ்சிமுனை இருதயராசா அணிகள் கிளிநொச்சி- யாழ்ப்பாணம் மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறவுள்ள சுப்பர் 20 அணிகளுக்கிடையிலான ஆட்டத்துக்கு தகுதி பெற்றன.(க-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயும் 3 குழந்தை...

அரியாலை ஏ.வி ஒழுங்கையை சேர்ந்த கிரிசாந்த் சுனேத்திரா (வயது 28), கி.கர்சா (வயது 4), கி.சயித் (வயது 02), கி.சரவணா (வயது 02) ஆகியோரே நேற்று காலை விஷம் கலந்த உணவை (ஐஸ்கிறீம்) உண்டு தற்கொலை செய்துகொண்டவர்களாவர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

மேற்படி இளம் பெண் தனது கணவரான ரதணன் கிருசாந் (வயது 37) மற்றும் 3 பிள்ளைகளுடன் நல்லூர் கன்னார் வீதியில் வசித்து வந்துள்ளனர். கணவர் நகை தொழில் செய்து வந்துள்ளார்.

தனது 25 வருட குடும்ப நண்பர் ஒருவருக்கு அவருடைய வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கென தனது வீட்டை விற்றும் கடன்பெற்றும ஒரு கோடியே 17 லட்சம் ரூபாயை கடனாக கொடுத்துள்ளார். அதில் நண்பருடைய பெயரில் 10 லட்சம் ரூபாயும் நண்பருடைய சகோதரனின் பெயரில் ஒரு கோடியே 7 லட்சம் ரூபாய் பெறுமதியுள்ள காசோலையும் கடனாக கொடுத்துள்ளார்.

குறித்த நண்பனிடம் பணத்தை கொடுத்து இரண்டரை வருடங்கள் கடந்த நிலையில் கடனை திருப்பி கேட்ட போது அவர் 10 லட்சம் ரூபாய் மாத்திரமே தனக்கு தந்துள்ளதாக தெரிவித்து அதை மீண்டும் பகுதி பகுதியாக திருப்பி கொடுத்துள்ளார்.

தனது சகோதரனின் பெயரில் கொடுத்த பணத்தை பற்றி தனக்கு தெரியாது தான் வாங்கவில்லை என மறுத்துள்ளார். சகோதரன் வெளிநாட்டுக்கு தப்பி சென்றுள்ள காரணத்தால் இது தொடர்பில் பொலிஸ் மற்றும் நீதிமன்றால் சாதகமான பதில் இவர்களுக்கு கிடைக்கவில்லை.

இதனால் ஏமாற்றம் அடைந்து மனவிரக்திக்குள்ளான குறித்த நபர், கடனில் இருந்து மீள வழியில்லை என தெரிவித்து குடும்பமாக தற்கொலை செய்வோம் என்ற முடிவுக்கு கணவனும் மனைவியும் வந்துள்ளனர். கணவனும் மனைவியும் முடிவெடுத்த வகையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி சாப்பாட்டில் நஞ்சு கலந்து உண்பதற்கு ஆயத்தமாகியுள்ளனர். அப்போது மனைவி தான் சாமியறையில் கும்பிட்டு விட்டு வருவதாக தெரிவித்து சென்றுள்ளார். மனைவி சாமி அறையில் இருந்து வெளியே வந்த போது குறித்த நபர் வைத்திருந்த நஞ்சு அனைத்தையும் அருந்தியுள்ளார், உடனடியாக மனைவி உறவினர்களுக்கு குறித்த விடயத்தை அறிவித்து அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளார். எனினும் குறித்த நபர் 2017.09.03 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கணவனின் இழப்பை தாங்க முடியாது பாரிய மன உளைச்சலுக்கு உள்ளான குறித்த பெண்ணே தனது மூன்று பிள்ளைகளுடன் கூட்டாக தற்கொலை செய்யும் விபரீத முடிவை எடுத்துள்ளார்.

கணவர் இறந்த பிற்பாடு குறித்த பெண் அரியாலை பகுதியில் தனது தாய் தந்தையுடன் வசித்து வந்துள்ளார். நேற்று காலை தந்தை வேலைக்கு சென்றவுடன், தாய் உடல்நிலை சற்று பாதிக்கப்பட்டவர், அவரை உறங்கச் செய்துவிட்டு வீட்டில் பிள்ளைகளுடன் இருந்த குறித்த பெண் உணவுடன் விசத்தை சேர்த்து தானும் அருந்தி பிள்ளைகள் மூவருக்கும் பருகக்கொடுத்துள்ளார். வீட்டுக்கு வந்த தந்தை பேரப்பிள்ளைகளை தேடினார். இதன்போது தாயார் வீட்டின் அறைக்குள் சென்று பார்த்த வேளை இவர்கள் உயிரிழந்திருந்ததனை கண்டுள்ளார். உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து உடல்கள் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்ட சடலங்களை யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை நடத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

குறித்த பெண் தற்கொலை செய்ய முன்னர் தனது பெற்றோர், தனது சிறியதாயார் மற்றும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் ஆகியோருக்கு எழுதிய கடிதம் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(மு-4,9,30)

## அரசியல் கைதிகள்...

பெற்றுத்தர போகின்றார்கள் எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க மண்டபத்தில் நேற்று பிற்பகல் ஆறு மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். மேலும் அரசியல் கைதிகளது கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி பல்வேறு சிவில் அமைப்புக்கள் பல போராட்டங்களில் ஈடுபட்ட நிலையிலும் அரசு பாராமுகமாக இந்த நிலையில் அரசியல் கைதிகளது விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு ஆதரவாக செயற்பட்டும் எமது மக்கள் பிரதிநிதிகளுக்கு அழுத்தம் வழங்கும் வகையில் போராட்டங்களில் ஈடுபட போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் தமது வழக்குளை மீளவும் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரி கடந்த ஒருமாத காலத்திற்கும் மேலாக தொடர் உண்ணாவிரத போராட்டத்தை உயிருக்கு ஆபத்தான நிலையிலும் முன்னெடுத்து வருகின்றனர். இவர்களது இந்த சிறிய கோரிக்கையை கூட அரசாங்கம் தட்டிக்கழித்து வருகின்றது.

இது தொடர்பில் எமது மக்கள் பிரதிநிதிகளும் எந்தவித நடவடிக்கைகளோ அல்லது அரசுக்கு அழுத்தம் வழங்கும் செயற்பாடுகள் அற்ற நிலையில் பாராளுமன்றத்தில் இருந்து விட்டு எழும்பி வருகின்றனர். எமது போராட்டங்களை அரசு கண்டுகொள்ளாத நிலையில், இனி நாம் வாக்களித்து தெரிவு செய்த எமது பிரதிநிதிகளுக்கு அழுத்தம் வழங்க முடிவு செய்துள்ளோம். குறிப்பாக மைத்திரி அரசுக்கு வாக்களிக்குமாறும் அதன்மூலம் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தான் மக்களிடம் கூறியிருந்தது.

அதனால் தான் மக்களும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கினார்கள். எனினும் அவர் இந்த கைதிகளின் சாதாரண கோரிக்கையை கூட நிறைவேற்றாமல் இருந்து வருகின்றார். கைதிகளுடைய கோரிக்கைகளை கூட அரசுக்கு அழுத்தம் கொடுத்து நிறைவேற்ற முடியாத கையாலாகாத நிலையில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இனி எந்த விடயங்களை தமிழ் மக்களுக்காக பெற்றுத்தர போகின்றது? ஆகவே தான் பாராளுமன்ற பதவிகளை துறந்து, எங்கள் மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காக செயற்பட முன்வர வேண்டும். அதுவரை அவர்களுக்கு அழுத்தம் வழங்கக்கூடிய வகையில் போராட்டங்களை முன்னெடுக்க போவதாக கூறினார்கள்.

இந்த சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், தமிழ் மக்கள் பேரவை, யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், வடமாராட்சி கிழக்கு பிரஜைகள் குழு, சமூக விஞ்ஞான ஆய்வு மையம், சிவசேனா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், வடக்கு மாகாண புதிய அதிபர் சங்கம், சைவ மகா சபை, வலி.வடக்கு மீள்குடியேற்ற குழு, ஆகியன கலந்து கொண்டிருந்தன. (மு-4)

## ஸ்பெயினிலிருந்து...

தலைமையிலான ஸ்பெயின் மத்திய அரசு திட்டமிட்டுக் கொண்டிருந்த நிலையில் கேட்டலோனிய நாடாளுமன்றத்தில் தனி நாடு பிரகடனம் குறித்த வாக்கெடுப்பு நேற்று (வெள்ளியன்று) நடந்தது.

இதில் சுதந்திரத்துக்கு ஆதரவாக 70 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் பதிவாயின. எதிர்க்கட்சிகள் இந்த வாக்கெடுப்பை புறக்கணித்தன.

முன்னதாக, கடந்த ஒக்டோபர் 1-ஆம் திகதி ஸ்பெயினிலிருந்து கேட்டலோனியா தன்னாட்சி பிரதேசம் பிரிந்து தனிநாடாக அறிவிப்பது குறித்து நடத்தப்பட்ட பொது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் 43% கேட்டலோனிய மக்கள் வாக்களித்தனர் என்றும், அவர்களில் 90% கேட்டலோனியா தனி நாடாகப் பிரிவதற்கு ஆதரவு தெரிவித்தனர் என்றும் கேட்டலன் அரசு கூறியிருந்தது.

அந்த வாக்கெடுப்பு செல்லாது என்று ஸ்பெயின் அரசியலமைப்பு நீதிமன்றம் அறிவித்தது.

கடந்த ஒக்டோபர் 11 அன்று ஸ்பெயினில் இருந்து கேட்[illegible] தனி நாடாகி[illegible] கேட்டலோனிய அதிபர் கார்லஸ் பூஜ்டிமோன் மற்றும் பிற பிராந்தியத் தலைவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டனர்.

எனினும், ஸ்பெயினுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு, அந்தப் பிரகடனத்தை செயல்படுத்துவதை சில வாரங்களுக்கு நிறுத்திவைப்பதாக அப்போது அறிவிக்கப்பட்டது.

நெருக்கடி நிலையில் தனது நேரடி ஆட்சியை தன்னாட்சி பிரதேசங்களில் அமல்படுத்த ஸ்பெயின் அரசுக்கு அந்நாட்டு அரசியலமைப்பின் 155-வது பிரிவு வழிவகை செய்கிறது. இதுகுறித்து ஸ்பெயின் நாடாளுமன்றம் இன்னும் வாக்களிக்கவில்லை.

அந்த வாக்கெடுப்பில் கேட்டலோனியாவில் நேரடி அதிகாரத்தை அமல்படுத்த அனுமதி வழங்கப்பட்டால், கேட்டலன் தலைவர்களை பதவிநீக்கம் செய்து, ஸ்பெயின் அரசு கேட்டலோனியாவை தனது முழு நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியும்.

பிராந்திய தலைநகர் பார்சிலோனாவில் பிராந்திய நாடாளுமன்றம் உள்ளது. தனிக் கொடி, தனி தேசிய கீதம், அதிபர், அமைச்சரவை, காவல்துறை ஆகியவற்றைக் கொண்ட கேட்டலோனியாவின் வெளியுறவு, பாதுகாப்பு, நிதி ஆகியவை ஸ்பெயின் அரசின் கீழும், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், உள்நாட்டு பாதுகாப்பு ஆகியவை பிராந்திய அரசின் கீழும் உள்ளன.

கேட்டலோனியா தனி நாடானால், பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாகவும் ஸ்பெயின் பாதிக்கப்படுவதுடன் ஐரோப்பாவில் உள்ள பிற தனி நாடு கோரிக்கைகள் வலுப்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.(மு-11)

## கடற்றொழிலுக்கு...

ன்றி உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (மு-9,30)

## மோ.சைக்கிள்...

ள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதில் அளவெட்டியை சேர்ந்த பரராஜசிங்கம் ரங்கேஸ்வரி (வயது 60) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.(மு-30)

## தமிழ் அரசியல்...

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியிலும் கொழும்பிலும் பாரிய போராட்டங்கள் பொது அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் கைதிகளின் பெற்றோர், உறவுகளும் ஜனாதிபதியை தனித்தனியே சந்தித்து அரசியல் கைதிகளுக்காக கோரிக்கையை முன்வைத்தனர்.

அதற்கு கடந்த புதன்கிழமை வரை தனக்கு கால அவகாசம் தருமாறும் நீதி அமைச்சர் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி தீர்வு தருவதாக உறுதியளித்தார்.

எனினும் ஜனாதிபதியின் கால எல்லை கடந்த 3 நாட்களான நிலையிலும் எந்த உறுதியான பதிலும் கிடைக்காததால் உறவுகளும், மாணவர்களும் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். (மு-11)

## நட்பை நம்பி...

டார். இச் சம்பவம் தொடர்பாக அவர்களது உறவினர்கள் கருத்து தெரிவிக்கையில்

இறந்த பெண்ணின் கணவர் இணுவிலில் உள்ள தனது சினேகிதனுக்கு ஒரு கோடியே பதினேழு லட்சம் ரூபா நம்பிக்கை அடிப்படையில் கடனாகக் கொடுத்தார்.

அந்த நம்பிக்கைக்கு காரணம், அவர்கள் இருவரதும் தந்தையரும் நண்பர்கள் அதே போலதான் இவர்களும் நண்பர்கள். அந்த வகையில் தான் நம்பிக்கை அடிப்படையில் இவ்வளவு பெரிய கடன் கொடுக்கப்பட்டது. ஆறு மாதத்தில் திருப்பித் தருவேன் என்று தான் கடன் வாங்கினார். ஆனால் கொடுக்கவில்லை. கேட்கப்போனால் ஏமாற்றுக் கதைகள் கதைத்து கடைசிவரை காசு கொடுக்கவில்லை.

காசு கடனாகக் கொடுக்கும்போது சினேகிதனின் மனைவி, தமையன் மற்றும் தமையனின் மனைவி ஆகிய மூன்று பேரும் [illegible] வாங்கினார்கள். இதன்படி [illegible] பெயருக்கு பத்து லட்சம் காசும் தம்பியாரின் பெயருக்கு மிச்சத் தொகையும் கொடுத்தது.

ஆறு மாதத்துக்குப் பிறகு காசு குறித்துக் கேட்டபோது காசோலையிலிருந்து காசு திரும்பிவிட்டது. அவர் காசு போடவில்லை. இது குறித்து விசாரித்போது காசு வாங்கியவரை களவாக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவிட்டார்கள்.

பத்து லட்சம் வாங்கிய தமையனிடம் கேட்டபோது என்னிடம் பத்து லட்சம் தானே நீ தந்தது, நீ செய்யிறத செய்துபார் என்று சொன்னார். காசு வாங்கியவரின் மனைவியிடம் சென்று, நீதானே பொறுப்பு நின்றாய் என்று கேட்டபோது, நான் நின்றதற்கு என்ன ஆதாரம் இருக்கு? நீ வாங்குறமாதிரி வாங்கிப்பார் என்று சொல்லியிருக்கிறார்.

இதன்பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு பத்து லட்சம் வாங்கிய தமையன் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து முடித்துவிட்டார். மிச்சம் கொடுக்கவில்லை. போன ஓகஸ்ட் முப்பதாம் திகதி வழக்குக்கு போய் வந்து முப்பத்தோராம் திகதி அவர் தற்கொலை செய்ய மருந்து குடிச்சவர் 3ஆம் திகதி இறந்தவர். அப்போதே குடும்பத்தோடு சாகுற எண்டுதான் திட்டம்போட்டு, அதன்படி அவர் முதல் மருந்து குடித்துவிட்டார். அவர் முதல் குடிச்சதால் அவரின் பரிதாபத்தைக் கண்டு மனைவி அவரைக் காப்பாற்றும் முயற்சியில் தான் குடிக்கவில்லை. ஆனாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

பிள்ளைகளையும் தாயையும் மிகவும் கவனமாகப் பார்க்குமாறு வைத்தியசாலையில் எங்களிடம் மிகவும் வற்புறுத்திக் கூறி அனுப்பினார்கள். அப்படித்தான் இவ்வளவு நாளும் இவர்களைக் கவனமாகப் பார்த்துப் பார்த்துவந்தோம். அவா தனது அம்மாவைப் படுக்குமாறு கூறிவிட்டே இந்த விபரீத முடிவினை எடுத்துள்ளா. இது அவர்களின் வீடுதான், நாங்கள் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்கிறோம் என்று கண்ணீரோடு கூறினார்கள். (மு-9)

## வாழ ஆசைப்பட்டோம்;...

ள்ள அம்மா அப்பா அண்ணா தம்பி அன்ரா, என்னை மன்னியுங்கள். பிறந்தவர்கள் யாவரும் இறப்பவர்களே. ஒன்றை மட்டும் நினைத்து மனதை ஆறுதல் படுத்துங்கள். உங்கள் பிள்ளையின் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றினீர்கள். வாழ்ந்த வருடங்கள் குறைவானாலும் நான் இறைவனின் அனுக்கிரகத்தை பெற்றவள்.

காரணம் நான் உங்களுடன் வாழ்ந்த வாழ்வும் நிறைவானதே. 1000 குறைகள் சூழ இருந்தும் அவையாவும் ஒரு தூசிக்கு சமன் ஆக வைத்து மேலோங்கிய அன்பை தந்து என் புருசன் தந்த வாழ்வும் நிறை வானதே. ஒரே ஒரு கவலை தான் நாங்கள் குடும்ப மாக நீடித்த காலம் வாழ ஆசைப்பட்டோம். இறுதி வரை அதற்காக போராடினோம் முடியவில்லை.

போகிறோம். என்ர அம்மாவை கவனித்து கொள்ளுங்கள். என்னை விட என் புருசன் அவவை இறுதிக்காலம் வைத்து பார்க்க ஆசைப்பட்டார். அதுவும் முடியவில்லை. நாங்கள் போகிறோம்.

என்னுடையதும் என் பிள்ளைகளினதும் இறுதி சடங்கை என் வீட்டார் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் என் கணவர் வீட்டு பகுதிக்கு கொடுக்க வேண்டாம். இதுவே எனது விருப்பம். தேவைப்பட்டால் இக்கடிதத்தை காட்டி பொலிஸாரிடம் எப்பிரச்சினையும் இல்லாமல் எம் மரண வீட்டை மிகவும் எளிமையாக மேளம் போஸ்மோட்டம் இல்லாமல் உடனடியாக எடுக்கவும். அன்பு மகள் சுனேத்திரா (பவா) என எழுதப்பட்டுள்ளது.

மூன்றாவது கடிதம்

அன்புள்ள ரஞ்சி சித்திக்கு ....

என்னை மன்னியுங்கள், உங்கள் கோபம் நியாயமானதே. ஆனாலும் என் நிலை என் பிள்ளைகளின் நிலை எங்களை மட்டுமே சார்ந்தது. வலிகளும் வேதனைகளும் எங்களுக்கே சொந்தமானது. ஆறுதல்களையும் தாண்டி ரணமாகிறது. ஒவ்வொரு நொடியும் நான் உங்களிடம் தீபன் அண்ணாவிடம் என் குடும்பத்திடம் மன்னிப்பு கேட்பதோடு உங்கள் கோபங்களையும் பேச்சுக்களையும் மனதார ஏற்கிறேன்

தவறு செய்தவன் தண்டனைக்குரியவன் பல விடயங்களில் எனக்காக அல்லாமல் நியாயங்களை கதைத்து என் உரிமைகள் நிறையவற்றை உங்கள் மூலம் இறைவன் எனக்கு பெற்று தந்தார். கூடவே ஆஸ்பத்திரியில் கதைத்த எல்லா விடயத்துக்கும் அங்கு வந்த எல்லாரிடமும் மன்னிப்பு கேட்கிறேன் என் வாழ்க்கையில் 75% மானவை உங்களுக்கு தெரிந்ததே. பிழைகள் பழமைகளாகவே முடிந்து போகட்டும்.

என்னால் மாமா மாமியுடன் போக முடியாது. நான் விருப்பப்படவுமில்லை, காரணம் என்னவன் இருக்கேக்க என்னை இவர்கள்

2ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணை அதி...

மணியந்தோட்டப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இச் சம்பவத்தில் அதே இடத்தினைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

இச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முதற் கட்ட விசாரணையினை மேற்கொண்ட யாழ்ப்பாண பொலிஸார் சூட்டுச் சம்பவத்தில் இருந்து தப்பிய இளைஞரிடம் விசாரணையினை மேற்கொண்டிருந்தனர். இருப்பினும் எந்த தரப்பினர்களால் எதற்காக சூட்டுச் சம்பவம் நடத்தப்பட்டது என்பது தொடர்பான தகவல்களை பொலிஸார் வெளியிட்டிருக்கவில்லை.

இந்நிலையில் குறித்த சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணையினை மேற்கொள்வதற்கு கொழும்பில் இருந்து விசேட பொலிஸ் குழுவினர் அனுப்பிவைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வந்த விசேட பொலிஸ் குழுவினர் சூட்டுச் சம்பவம் நடத்தப்பட்ட இடத்தினை நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து சூட்டுச் சம்பவத்தில் இருந்து தப்பிய இளைஞரிடமும் விசாரணை நடத்தியிருந்தனர். இவ்விசாரணைகள் ஊடாக பெறப்பட்ட தகவலின் படி மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டன.

இதன்படி நேற்று முன்தினம் மாலை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவானின் உத்தரவினை பெற்றுக் கொண்ட பொலிஸ் குழுவினர் மண்டைதீவில் உள்ள கடற்படை முகாமில் சூட்டுச் சம்பவம் நடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தினை தேடி அதிரடியாக சோதனை செய்திருந்தனர்.

பல மணிநேரங்கள் அங்கு தேடுதல் நடத்தப்பட்ட போதும் அப் படைமுகாமில் எந்த வாகனமும் பொலிஸாரினால் மீட்கப்படவில்லை. இந்நிலையில் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று யாழ்.பண்ணைப் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமினை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தியிருந்தனர்.

அங்கு சூட்டுச் சம்பவம் நடத்தியவர்கள் பயன்படுத்திய முச்சக்கர வண்டியினை இனங்கண்டுள்ளனர். குறித்த முச்சக்கரவண்டி யாருடைய பெறுப்பில் இருந்தது மற்றும் எவ்வாறு விசேட அதிரடிப்படை முகாமில் கொண்டு வந்து மறைத்து வைக்கப்பட்டது என்பது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இவ்விசாரணைகளின்படி இனங்கண்ட முச்சக்கரவண்டியினை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார். சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையினை கொழும்பில் இருந்து வந்த விசேட பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். (மு-4)

## வாழ ஆசைப்பட்...

வணக்கம்.

எனது பெயர் திருமதி கிரிசாந் சுனேத்திரா எனது கணவர் (கடந்த 03.09.2017 அன்று) ஒரு கோடியே பதினேழு இலட்சம் கொடுத்து ஏமாந்த காரணத்தினால் உயிரை மாய்ப்புச் செய்தார்.

எனது கணவர் இல்லாத வாழ்க்கையை என்னால் வாழ முடியவில்லை. எனது கணவர் வீல் கதிரையில் (சில்லுக் கதிரை) உட்கார்ந்து எம்முடன் வாழ்ந்தால் கூட போதும். அந்தளவுக்கென்றாலும் இறைவன் தந்தால் போதும் என்று வேண்டினேன் பலன் கிடைக்கவில்லை.

பிள்ளைகளுக்காக வாழலாம் என்றாலும் என் பிள்ளைகளின் கேள்விகளுக்கு என்னால் பதில் கூற முடியவில்லை.

அப்பா எப்ப வருவார்?. அப்பா கண் திறந்து விட்டாரா? எப்ப பார்ப்பார்? ஏன் வரவில்லை.

போஸ்மோட்டத்தில் தந்தையை பார்த்து விட்டு எங்கட அப்பா வெள்ளை தானே ஏன் கறுத்தவர். வெள்ளையா வருவாரா ? அப்பா வர நாங்கள் பார்க்குக்கு போவம்...

அடுக்கடுக்கான என் பிள்ளைகளின் கேள்விகளுக்கு என்னால் பதில் கூற முடியவில்லை. எத்தனை காலம் ஏமாற்றுவது. எனது கணவனின் இறுதி கடிதத்தை இத்துடன் இணைத்துள்ளேன்.

எங்கள் சாவுக்கு சிறிசங்கர், மனைவி சுகனியா, சிறிதரன் ஆகியோரே காரணம். தவறு செய்தவர்களை விட தூண்டுபவர்களே குற்றவாளிகள். என்றதை பே[illegible] நாங்கள் இந் நிலைக்கு வர இவர்களே காரணம். எங்களுக்கு எங்களின் விருப்பப்படி நீதியை ஆராய்ந்து நீதியை பெற்றுத்தர தாழ்மையுடன் கேட்கிறேன். அத்துடன் உயிரை விட வேறு எதுவும் இல்லை எங்கள் பக்க நியாயத்தை நிரூபிக்க.

கடவுள் ஒரு சில பேரையே சத்தியத்தை நிலைநாட்ட பூவுலகில் படைக்கிறார். அந்த வகையில் நாங்கள் உங்களை நினைக்கிறோம். இந்த வழக்கை தங்கள் பார்வையின் கீழ் எடுத்து நியாயத்தை பெற்று கொடுங்கள்

இவ்வண்ணம்.....

இரண்டாவ[illegible] கடிதம்

அன்பு 23


Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்
புதிய சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.
கரவீணா இசை மன்றம்
4. செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293
(C-195)

Group Class
A/L 2019, 2018, Day Class
Paper Class லவன்
ICT
உதவி விரிவுரையாளர் கணனி விஞ்ஞானம், யாழ்.பல்கலைக்கழகம்
இடம் : பெருமாள்கோவில் வீதி
சனி, ஞாயிறு (3.00 - 4.30)
குறிப்பு : A/L தவணைப்பரீட்சை, இறுதிப் பரீட்சையை நோக்கியது. அனைத்து துறை மாணவர்களும் பங்குபற்றலாம்.
ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
அனுமதி இலவசம்
077 326 1648
(C-194)

அமெரிக்க லொத்தர் விசா
மிகக் குறைந்த கட்டணத்தில் நேர்த்தியான முறையில் அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.
செல்வா கொமினிகேசன்
124, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5169
(1084)

விற்பனைக்கு
கிளிநொச்சி 155-ம் கட்டையில் சற்றிங்குக்கு பயன்படுத்திய 40 போட்கள், 650 முட்டுக்கள் மற்றும் 50 choicesகள் விற்பனைக்கு உண்டு.
மொத்த விலை: 175000/=
தொடர்பு: 0766676223
(1163)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-153)
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை
(C-167)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
0768226243
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.
2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்க விசா வெற்றியாளர்
(C-153)
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
V2 TRAVELS
யாழ்ப்பாணம் #49A, சப்பல் லேன் 0768226241 | கிளிநொச்சி A9 வீதி 0768226240 | சாவகச்சேரி 10,பேருந்து நிலையம் 0768226242 | நெல்லியடி முடக்காட்டு சந்தி 0776699892 | பருத்தித்துறை 324,யாழ் பிரதான வீதி 0768226230 | வல்வெட்டித்துறை யாழ் வீதி,வல்வெட்டி 0776697960

SB Travels and Tours Pvt Ltd
No.212 கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள SB Travels and Tours Pvt Ltd இல் ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமான பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் இந்தியாவுக்கு Budjet Airlinesகளில் மதுரை 22000இல் இருந்தும் சென்னை 23500இல் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
021 222 8555, 222 9555,
076 691 1080,81,82,83, 077 711 1228
(C-158)

அமெரிக்க லொத்தர் விசா
இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)
18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு
யாழ்ப்பாணம் / வேலனை / கிளிநொச்சி
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
(C-166)

SOFT VIEW COMPUTER CENTER
யாருக்கு தான் கணனி துறையில் வேகமாகவும்!!! ஆழமாகவும்!! குறைந்த கட்டணத்துடனும் கற்க பிடிக்காது???
தினமும் 9.00 தொடக்கம் 6.00 மணி வரை பயிற்சிகள்
Grade -10,11 மாணவர்களுக்கு கணிதபாடம்
கணனி,ஆங்கிலம்,சிங்களம், பிரத்தியேக வகுப்புக்கள்
100 Main Street,Jaffna,0779053545, 021 222 4885

நடமாடும் மிருகவைத்திய சேவை
சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். Dr.K.கிருபாகரன்
0779738802
முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.
(1157)

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடத்தும்
பரிசளிப்பும் கலைநிகழ்வும் அழைப்பு
இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு,காரைநகர்.
காலம் : 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்

சொலெக்ஸ்
நீர் பம்பிகள்
உயர்ந்த. நம்பிக்கையான

0767 027344
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு
SOLEX WATER PUMPS
சொலேக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இலங்கை.

TECHNO WORLD
A/L 2019, 2018, Day Class
அனைத்துத்துறை மாணவர்களுக்குமானது
சித்திரம் - Mr.ஜெயந்தன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
ஊடகக்கல்வி - Mr.கோணேஸ் (யாழ்ப்பாணம் மகாஜனக்கல்லூரி)
புவியியல் - Mr.ஜனகன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
இலகு கணிதம் - Mr.துபீபன் (விரிவுரையாளர்)
ஆரம்பம் : 28.10.2017
பிரிவு : I சனி, ஞாயிறு 2.30 - 4.00
பிரிவு : II சனி, ஞாயிறு 11.30 - 1.00
A/L - 2019 ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்
A/L - 2018 Paper Class நடைபெறும்
குறிப்பு : தனிப்பட்ட அனுமதி உண்டு குறைந்த கட்டணம்
அனுமதி இலவசம்
077 017 5346
(C-194)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org